www.padippakam.com

புதிய சமதர்மம்
පුදිය සමධර්මම්
PUTHIYA SAMADHARMAM

இதழ் : 35 ஏப்ரல் மார்ச் 2001 விலை : ரூபா 10.00

நாட்டின் தலைவியார் பிச்சை பாத்திரத்துடன் உலகம் முழுவதும் சுற்றுகின்றார். பொதுஜன முன்னணியினர் காதில் பூ வைக்கும் அம்மையார் சர்வதேச சமூகத்தின் காதில் பூ வைக்க முடியாது. தமிழ் ஈழ விடுதலைப் புலிகளை தடை செய்துள்ளமையால், பந்து இப்போது அம்மையாரின் கைக்கு வந்துள்ளது. தீர்வை வழங்கி பந்தை ஓங்கி அடிப்பாரா அல்லது உள்நாட்டு பிரச்சினை தாங்க முடியாது பிரான்சுக்கு ஓடுவாரா? வருங்காலம் பதில் சொல்லும்





சந்தியிலே விடப்பட்ட (அ)சத்தியக்கிரியை ...03

பிரித்தானிய அரசு தமிழ் ஈழ விடுதலைப் புலிகளை தடை செய்தாலும் சட்டத்தை மீறாத வகையில் அவர்களால் செயற்பட முடியும்

*மங்கள முனசிங்க*
*பிரித்தானிய இலங்கைக்கான உயர் ஸ்தானிகர்*

முழு உலகமும் எதைச் சொன்னாலும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் நெஞ்சத்தில் நிறைந்து நிற்கின்றனர். இந்தத் தடை அவர்களின் செயற்பாட்டைப் பாதிக்காது.

*அப்பாப்பிள்ளை வினாயகமூர்த்தி*
*அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்*

# சந்திரிகாவின் இரட்டை நிலைப்பாடு

ந முனைப்பில் இருந்து சற்றேனும், பின்வாங்கியதாக சந்திரிகா, ளை இன்றுவரை, தென் இலங்கையில் காட்டிக் கொள்வில்லை. டர்ந்து யுத்தத்தைக் கொடிய முறையில் நடத்துவதற்காகவே பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

ீன போர்த்தளபாடங்கள் வந்து குவிந்து கொண்டே நக்கின்றன. யுத்த நிறுத்தத்தை மூன்றாவது முறையும் றிவித்திருக்கும் விடுதலைப்புலிகளைச் சீண்டும் நடவடிக்கை டர்கிறது.

புறத்தில் மேற்கத்தய எஜமான்களுக்கு ஒரு சமாதான விரும்பி என்றே ரிகா அடித்துக் கூறி வருகின்றார்.

ாப்பிய நாடுகளுக்கு பிச்சைச் றுலாவை மேற்கொண்டிருந்த ிரிகா, சென்ற இடம் எல்லாம், தானம் விரைவில் மலரப் போகிறது. தலைப் புலிகளுடன் சமாதானப் சில் ஈடுபடும் நாள் நெருங்குகின்றது றெல்லாம் கதை அளந்து வந்தார்.

ிரிகாவின் குழப்ப நிலைக்குப் துஜன முன்னணியின் பலவீன லயே காரணமாகின்றது. இனவாத ிகளையும், யுத்த விரும்பிகளையும் விரும்பியவாறு செயற்பட அனுமதித்த சந்திரிகா இன்று அவர்களை மிறிச் செயற்பட முடியாத நிலையில் உள்ளார்.

புதிய அரசியலமப்புப் பற்றி இனவாதிகளுக்கு விளக்கிய சந்திரிகா, 13வது சரத்துக்கு அப்பால், எதுவும் வழங்கப்பட மாட்டாது என்று ஆணித்தரமாக கூறியுள்ளார். இதேவேளை மேற்குலத்தவர்களுக்கு இனப்பிரச்சினைக்குத் தீர்வாக என்னிடம் எல்லோரையும், திருப்தி செய்யக்கூடிய அரசியலமைப்புத் திட்டம் உள்ளதாகக் கூறி வருகின்றார்.

நாடே பற்றி எரிந்து கொண்டு இருக்கிறது. கொலை, களவு, கொள்ளை என எந்தப் பக்கம் திரும்பினாலும் செய்தி வந்து கொண்டே இருக்கிறது. வாழ்க்கைச் செலவு உயர்வால் மக்கள் கொதித்துப் போய் இருக்கின்றனர்.

இன்றுள்ள சூழ்நிலையில் சந்திரிகாவால் இனவாதிகளை ஒதுக்கவும் முடியாது, சர்வதேச சமூகத்தைத் திருப்தி செய்ய சமாதானத்தை நெருங்கவும் முடியாது. வரவிருக்கும் நாட்கள், குழப்பம் நிறைந்ததாகவே காணப்படப் போகிறது.

சந்திரிகா கடைப்பிடிக்கும் பொருளாதாரத் திட்டம் ஒன்றிற்காகவே, இன்று ஏகாதிபத்தியவாதிகளை இவரின் விலாங்கு நடவடிக்கைகைகளைக் கண்டும் காணாதது போல் இருக்கின்றனர்.

ஆனால் இந்த இரட்டை வேடத்தைச் சந்திரிகா தொடர்ந்தும் போட முடியாது. சர்வதேச சமூகம் எதிர்பார்க்கின்ற தீர்வை சந்திரிகாவால் ஒரு போதும் கொண்டு வர முடியாது. அதாவது தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும் ஒரு தீர்வுத் திட்டத்தை சந்திரிகாவால் நினைத்தும் பார்க்க முடியாது.

நவீன போர்க்கருவிகள் மூலம் தமிழ் மக்களின் குடியிருப்புக்களை நாசம் பண்ணவே முடியும். தமிழ் மக்களோடு ஒன்றாக கலந்திருக்கும் விடுதலைப் புலிகளை பிரித்தெடுக்கும் திறமை போராயுதங்களுக்கு இல்லை.

ண்டகாலமாக இலங்கை அரசு தமிழர்கள் மீது மேற்கொண்டு வரும் டக்குமுறைகள் மனித சங்கார நடவடிக்கைகளை பிரித்தானிய அரசு கருத்தில் டுக்கவில்லையா ?

*பிரித்தானிய தடை பற்றி....*
*அன்ரன் பாலசிங்கம்*



அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் பொதுச்செயலாளர் குமரகுருபரன்

தேசிய ரீதியில் தமிழ் மக்களுக்கு இருக்கும் அச்சுறுத்தல்களை எதிர்ப்பதற்காக தமிழ் கட்சிகளுடன் இதய சுத்தியுடன் இணைந்தோம். இந்தக் கால கட்டத்தில் இதை உணராதவர்களைத் தமிழ் மக்கள் ஒரு போதும் மன்னிக்க மாட்டார்கள்.



படிப்பகம்

www.padippakam.com



அண்மையில் மீஉயர் நீதிமன்றத்தில் பதவியேற்ற வைபவத்தில் நீதியரசர் C. V. விக்னேஸ்வரன் ஆற்றிய உரை மீது சிகல உறுமய பா. உ. திலக் கருணாரத்ன பாராளுமன்றத்திலும் பின்பு விகாரமகாதேவி பூங்கா பொதுக் கூட்டத்திலும் கண்டனம் தெரிவித்துள்ளார். நீதியரசரின் அந்த உரையில் பிரிவினைக்கு சார்பான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டிருப்பதாகவே காரணம் கற்பிக்கப்பட்டுள்ளது.



றிய உரையினைக் கவனிப்போம். அவர் இப்பிரச்சினை தொடர்பாக கூறியதாவது "அவர்கள் (தமிழர்கள்) தமது நியாயமான உரிமைகளையே வேண்டி நிற்கின்றனர். அவர்களுடைய நியாயமான உரிமைகள் 52 வருடமாக மறுக்கப்பட்டுள்ளன. 1977 இல் பதவியேற்ற அரசாங்கத்திடம் 5/6 பெரும்பான்மை இருந்தும் கூட அவர்களின் உரிமைகளை வழங்க எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. தமது உரிமைக்காக போராடிய தமிழ் மக்கள் 1983 வரை 4 தடவைகள் தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்பட்டனர். கொன்று குவித்து பொசுக்கப்பட்டனர். 1983 இல் அவர்கள் மீது பெற்றோல், ஊற்றப்பட்டு உயிரோடு பொசுக்கப்பட்டனர். அவர்களின் உடமைகள் கொள்ளையடிக்கப்பட்டு எரித்து சாம்பலாகக்கப்பட்டன. கடந்த 52 வருடமாக சிங்கள பெரும்பான்மை அரசாங்கம் எதுவென்றாலும் தமது உரிமைகளை வழங்கும் என்ற நம்பிக்கையை இழந்திருந்தனர். இவ்வாறு நம்பிக்கை இழந்ததன் காரணமாகவே அவர்களில் சிலர் தனிநாடு கோரும் நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

# "சிகல உறுமய" வின் சிங்கள பௌத்த வெறி நாட்டின் சாபக்கேடு

இறைமை என்பது ஒவ்வொரு பிரசைக்கும் உரித்தானது. நாட்டில் ஒற்றுமை, அதாவது வேற்றுமையில் ஒற்றுமை தேவை ஒவ்வொருவருக்கும் நீதி நியாயம் தேவை என்ற வகையிலான ஒரு மகிமையான செய்தியையே நீதியரசர் விக்னேஸ்வரன் தனது உரையில் உணர்த்தியிருந்தார். அத்தகைய தார்ப்பரியங்களை ஒரு போதும் புரிந்து கொள்ள முடியாத திலக் கருணாரத்ன போன்றவர்கள் ஆரம்ப காலம் முதல், அதாவது பிரபாகரன் பிறப்பதற்கு முன்பிருந்த, பிரிவினைக்குரிய விதைகளை நாட்டில் தூவி வந்தனர்.

**'சிகல உறுமய' பற்றி ஒரு வார்த்தை**

"சிகல உறுமய" அமைப்புக்குள்ளேயே என்ன நடந்து வந்துள்ளது என்பதை ஒரு கணம் நோக்குவோம்.

சிங்கள மக்களின் உரிமைகளுக்காக ஆணித்தரமாக குரல் கொடுப்பவருக்கும், "சிகல உறுமய" அமைப்பின் ஒரு பிரதான சிற்பியும் ஆரம்ப தலைவருமாகிய S.L. குணசேகர அந்த அமைப்பிலிருந்து அவமானப்படுத்தி தூக்கியெறியப்பட்டார். அவர் ஒரு மதம் எதையும் பின்பற்றுபவர் அல்லர் என்று பகிரங்கமாக பிரகடனப்படுத்தியிருந்தும் கூட, அவர் பிறப்பில் ஒரு கிறிஸ்தவர் என்ற பிரதான காரணத்தின் நிமித்தமே அவருக்கு அந்தக்கதி நேர்ந்தது. பௌத்த வெறியின் தாக்கம் எத்தகையது என்பதையிட்டு. பாவம் S. L. குணசேகர கடுமையாக வேதனைப்பட்டிருந்ததை யாரும் அறிவர்.

**நீதியரசரின் உன்னத நோக்கு**

நிற்க, நீதியரசர் விக்னேஸ்வரன் ஆற்றிய உரையானது ஒரு மைல் கல் என்றால் அது மிகையல்ல. ஏனென்றால் அது ஒற்றுமையையும், முன்னேற்றத்தையும் விரும்பும் ஒரு உன்னத நோக்கமே அதுதான். அவர் நேர்மையாகவும் துணிச்சலாகவும் தமிழ் மக்கள் அனுபவித்துக் கொண்டிருக்கும் வேதனைகள் சோதனைகளை இரத்தினச் சுருக்கமாக எடுத்துக் கூறியுள்ளார். இந்த நாட்டில் வாழக்கூடிய இலட்சக்கணக்கான மக்கள், அதாவது அறுபது வீதத்துக்கு மேற்பட்ட மக்கள், அதிகரித்த வண்ணம் உள்ள பொருளாதார சுமைகள் காரணமாக திணறிக் கொண்டிருக்கும் நிலையில் நாட்டில் முன்னேற்றம் ஏற்பட்டு இம்மக்களுக்கு விடிவு ஏற்பட வேண்டுமாயின் கொடிய யுத்தம் நிறுத்தப்பட்டு தமிழ் தேசிய இனப்பிரச்சினை உரிய முறையில் விரைந்து தீர்க்கப்பட வேண்டியது அவசியமாகும்.

நாட்டு நன்மைக்காக உண்மையில் மிக தன்னலமற்ற முறையிலேயே அவர் பின்வருமாறு கூறியுள்ளார் என்பது நன்கு புலனாகிறது. இந்த நாட்டையும் அதன் எல்லா மக்களையும் (என்னை வெறுப்பவர்களையும் கூட) நான் நேசிப்பதால் எனக்காகவோ தமிழ் மக்களுக்காகவோ அல்ல, எமது இந்த நாட்டில் வாழும் எல்லா சமூகங்களிடையேயும் சௌஜன்ய உறவுகள் நிலவ வேண்டும் என்பதற்காக இந்த சந்தர்ப்பத்தில் நான் ஒன்றைக் கூற விரும்புகின்றேன். அதாவது, சிங்கள மக்களுக்கு சிங்கள மொழியும் பாரம்பரியமும் எவ்வளவு முக்கியமோ இந்த நாட்டின் தமிழ் பேசும் மக்களுக்கும் அவர்களின் மொழியும் பாரம்பரியமும் முக்கியமானவை என்பதாகும். இவ்விரு மொழிகளும் அவ்வப் பிராந்தியங்களில் முதன்மையாக இருக்க வேண்டிய அதேவேளை ஆங்கில மொழியானது இரு சம உரிமை கொண்டவர்களுக்கிடையில் இணைப்பு மொழியாக அமைய வேண்டும்

நீதி என்னும் தராசை நேராகப் பிடிக்கும் எந்த ஒருவருக்கும் இத்தகைய கருத்தினை முன் வைப்பதற்கு உரிமை மட்டுமல்லாமல் கடமையும் உண்டு. இது இந்த நாட்டின் ஒற்றுமைக்கும் ஸ்திரத்தன்மைக்கும் முன்னேற்றத்திற்கும் செய்யக்கூடிய அற்புதமான பணியாகும்.

**ஜனாதிபதி நகல் அரசியலமைப்பு மீது ஆற்றிய உரையிலிருந்து....**

இச்சந்தர்ப்பத்தில், ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க 2000 ஆவணி 3ம் திகதி பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் அரசியலமைப்பு நகல் ஒன்றினைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து ஆற்றிய உரையினைக் கவனிப்போம்.

மக்களின் உரிமைகள் பராதீனப்படுத்த முடியாதவை என்ற நியதியின் அடிப்படையில் தத்தம் உரிமைகளை மக்கள் அனுபவிப்பதற்கு எந்த வித தங்கு தடையும் இருக்கக்கூடாது என்பதையும் வலியுறுத்துவது அவசியமாகிறது.

ஜனாதிபதி சந்திரிகா தமதுரையில் பின்வருமாறு மேலும் கூறினார்.

"நான் மீண்டும் மீண்டும் கூறிவைக்க விரும்புவது இதுதான். அதாவது, அதிகாரப்பரவலாககல் முறைமை பற்றி மகா சங்கத்தின் சில உறுப்பினர்கள் அடங்கலாக, ஒரு சிறு எண்ணிக்கையான மக்கள் தவறான சிந்தனையில் உள்ளனர். திலக் கருணாரத்ன போன்றோரும் இந்த சிறுபிரிவினரைச் சேர்ந்தவர்கள் ஆவர். சமாதானத்தையும், சக வாழ்வையும் நேசிக்கும் எல்லா மக்களும் இத்தகையவர்களை மக்கள் விரோதிகள் அல்லது தேசத்துக்கு விரோதிகள் என ஒதுக்கித்தள்ள வேண்டும். அரசாங்கங்களும் இவர்களைக் கண்டிப்பதோடு நின்று விடாமல் இவர்களின் தாளத்திற்கே ஆடுவதையும் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

வ. திருநாவுக்கரசு.

புதிய இடதுசாரி முன்னணி

# தாய், மகள், மகன்மார் பேரப்பிள்ளை வெலிக்கடைச் சிறையி

கடந்த வருடம் கொழும்பு மாநகரசபை நகர மண்டபத்திற்கு முன்பாக, ஜனாதிபதி சந்திரிகாவை கொலை செய்ய முயற்சித்த தற்கொலைக் குண்டுதாரிக்கும் மேற்படி மூன்று தலைமுறைக்கும் இடையே தொடர்பு இருக்கலாமா? என்ற சந்தேகத்தின் பேரிலேயே இவர்களை வெலிக்கடை சிறைச்சாலையில் விளக்க மறியலில் வைத்துள்ளனர்.

கடந்த 12 மாதங்களாக தடுத்து வைக்கப்பட்டு இருக்கும் இவர்களது அடிப்படை மனித உரிமைமீறல் வழக்கை துரிதப்படுத்துமாறு பிரதம நீதியரசர் உத்தரவிட்டுள்ளதாக தெரியவருகிறது.

இவர்களின் இரத்தத்தை தற்கொலைக் குண்டுதாரியின் இரத்தத்துடன் பரிசோதித்த போது, முடிவு எதிர்மறையாக இருப்பதாகத் தெரியவருகிறது.

இக்குடும்பத்தின் தாயாரான 70 வயது நிரம்பிய கந்தப்பன் மாரிமுத்துவுக்கு சிறைச்சாலை மருத்துவமனையில் வைத்து செலையின் ஏற்றப்படுவதாக அறிய முடிகிறது. இரகசிய பொலிசாரால் மேற்படி முதியவரிடம் இருந்து எந்தத் தகவலையும் பெறமுடியாத நிலை இருப்பதாகத் தெரிகிறது. இதற்குக் காரணம் மூதாட்டி ஞாபக சக்தியை இழந்துள்ளார் என்பதாலேயே.

மூதாட்டியின் மகளான மாணிக்கம் ஞானேஸ்வரி (வயது 25) தற்போது தனது இரண்டு வயது மகளுடன் வெலிக்கடைச் சிறையில் உள்ளார். இவரே அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கைத் தாக்கல் செய்துள்ளார். இவரது மனுவில் 1999ம்

ஆண்டு டிசம்பர் மாதம்
திகதி இரகசிய பொலி
தனது தாயார், தனது
சகோதரர் இருவர், உட்
தன்னையும் தனது இர
வயது குழந்தையையும் எது
காரணமும் தெரிவிக்காது
செய்தனர் எனத் தெரி
துள்ளார். தான் தடு
காவலில் இருக்கும் போது
தனது குடும்பத்தை ஜனா
கொலை முயற்சி சந்தேகத்
பேரில் தடுத்து வைத்தி
கிறோம் என தெரிவித்துள்ள

தன் மீது சுமத்தப்
டிருக்கும் குற்றச்சாட்டுக
மறுக்கும் இப்பெண் இர
பரிசோதனையும் மாறு
உள்ளதாகவே தெரி
கின்றார். இப்பெண்ணை வி
ரணை செய்தவர்கள் இவ
தாக்கி உள்ளதோடு சி
ளத்தில் தயாரிக்கப்
ஆவணத்தில் வாசித்துக்
டாது கையொப்பம் இடு
பலாத்காரப்படுத்தியுள்ளன

ஏப்ரல் 28ம் தேதி
குடும்பத்தையும் கொழு
மஜிஸ்ரேட் நீதிமன்றத்
ஆஜர்படுத்தியபோது நீதி
பயங்கரவாத தடைச் சட்டத்
கீழ் இவர்களை தடுப்புக் க
லில் வைக்குமாறு உத்த
ட்டுள்ளார்.

மகளான முறையீட்டா
தன்னையும், தனது குடு
த்தையும் எதுவித கார
இல்லாமல் தடுத்து வைத்
ள்ளார்கள் என்றும், இரத்
பரிசோதனை கூட மா
ட்டதாக இருப்பதாகத் தெரி
துள்ளதோடு, சட்டத்து
முரணான வகையில் தம்ம
கைது செய்தமை, அடிப்ப
மனித உரிமை மீறலா
எனவும் குறிப்பிட்டுள்ளார்.

# யாழ் குடா நாட்டில் கலாச்சார சீர்கேடா?

பூரண இராணுவக் கட்டுப்பாட்டில் இருக்கும் யாழ் கு
நாட்டில் பல்வேறு விதமான கலாச்சார சீரழிவுக
தோன்றியுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்ற
மாணவர்களும், இளைஞர்களும் சீரழிவுக்கு உள்ளா
அபாயம் தோன்றியிருப்பதாகவும் தெரிய வருகிற
ஆபாசப் படங்கள், பாலியல் தொடர்பான துண்டு
பிரசுரங்கள் இங்கு கிடைப்பதால் மேற்படி இளம் சமுதா
கெட்டழியும் நிலை உள்ளதாகத் தெரிய வருகிறது.

மேற்படி பாலியல் ஆவணங்கள் சிங்களத்திலே
கிடைப்பதாகத் தெரிய வருகிறது. இது சம்பந்தமாக ய
மாநகர முதல்வர் தனது கடும் விசனத்தைத் தெரிவித்
துள்ளார்.

மிக இரகசியமான முறையில் யாழ் குடா நாட்டுக்கு
எவரால் கொண்டு வரமுடியும் என்பதில் சந்தேகங்க
நிகழ்ந்துள்ளன.

படிப்பகம்

www.padippakam.com



# சந்தியிலே விடப்பட்ட (அ)சத்தியக்கிரியை

ானிஸ்தானின் தலிபான் கம் புத்தர் சிலையை தகர்-ற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் கை அரசு புத்தர் போதித்த ானத்தின் பெயரால் வடக்கு கு மக்களின் குடியிருப்புக்-ீது குண்டுமாரி பொழிந்து ந்த தர்மத்தைக் காப்பாற்றி றது. நாட்டின் வருமானத்-ணிசமான பங்கை யுத்தத்-செலவு செய்கின்றனர். ல் எண்ணை விலை உயர்-விட்டது எனக்கூறி விலை-ள் உயர்ந்ததால் தொழி-மத்தியில் ஏற்பட்ட அமை-ர்மையைத் தொடர்ந்து த்துறையினருக்கு வாழ்-ச் செலவைச் சமாளிக்க 1000/= கொடுத்ததோடு கட்டுப்பாட்டில் இல்லாத ார் துறையினருக்கு ரூபா கொடுப்பனவு வழங்கும்படி ச்சர் வர்த்தமானியில் னம் செய்தார். ஆனால் ாக மலையகத் தோட்டத் லாளருக்கு அது முற்றாக கப்பட்டது. அதற்கு கைத் தொழிலாளர் சம்-னம் இலங்கைத் தொழி-காங்கிரஸ் செய்து ன்ட கூட்டு ஒப்பந்-ற்கமைய இந்த உரித்து டத் தொழிலாளர்களுக்கு ல என்று கையை விரித்தது. வாப்பந்தத்தில் கையெழுத்-த தொழிற்சங்கங்கள் கள் போராட்டக்களத்தில் க்கப் போவதாக மட்டும் ார்கள். இந்த நிலையில் ட்டின் எஜமானர்கள் உலக யின் அறிவுறுத்தலுக்-ய ரூபாயை மிதக்க ார்கள். மத்திய வங்கி கை ரூபாயின் பெறுமதியை கக்கூடாது, அப்பொறுப்பை தக வங்கிளிடமே விட்டது. ச் சந்தை சரிந்தது. வர்த்-கள் குழம்பிப் போயினர். ங்களின் விலை ஆகா-த நோக்கி உயரத் தொட-ன. ஆனால் ஆட்சியாளர்-இல்லை, இல்லை ரூபாயின் மதி சரியான இடத்தில் ப்படுத்தப்படும் எனக் ார். எவர் எதைக் கூறினாலும் க்கைச் சுமை மக்களை முத-நிகைக்க வைத்தது. தொட-அவர்களை இதற்கு எதிராக வைத்தது.

யகத் தொழிற்சங்கங்-ல் அதன் உறுப்பினர்கள் நெருக்கடியைத் தாங்க வில்லை. இ. தொ. காவும் சார்பு தொழிற்சங்கங்-யும் தவிர்ந்த தொழிற்சங்-ள் இ. தொ. காவைச் சாடத் ங்கினர். இதில் இ. தொ. கா. ந்திக் குழுவினர் தீவிரமாக தனர். அமைச்சர் ஆறுமுகம் ண்டமான் அதிர்ந்து போய் க்கும் ஆசை, மீசைக்கும் ச என்ற நிலைக்குத் தள்-டார். சரிந்து வரும் இ. தொ. ரேயடியாகச் சரிந்து விடா-டுப்பது எப்படி எனச் சிந்-ார். கடந்த கால வரலா-ப் புரட்டிப் பார்த்தார். தோட்-தொழிலாளர்களுக்கு எத்-ய "குல்லாய்" ஐ போடலாம் சிந்தித்தார் அதன் ாவுதான் சத்தியாக்கிரகம்.

ிய வம்சாவழி மக்களுக்கு ச்சிகரமான ஒன்று ஏனெனில் தியையும், நேருவையும், சுபா-ும் அவர்களின் தலைவர்களாக மரியாதையும் கௌரவப்படுத்துவதும் தான். இந்திய சுதந்திரப் போராட்டத்தில் இதய சுத்தியோடு, ஆத்ம சக்தியை திரட்டித் தியாக மனப்பான்மையுடன் மகாத்மா காந்தி செயற்பட்டதால் மக்கள் அவர்கள் பின் அணி திரட்டனர். பாகிஸ்தான் பிரிவதை விரும்பாத நேருவையும், சர்தார் பட்டேலையும், ஜின்னா பிரிய விரும்பினால் அவர் சுதந்திர நாட்டை அமைத்துக் கொள்ளலாம் என்ற காந்தியின் வலியுறுத்தலை அவர்களால் ஏற்காமல் இருக்க முடியவில்லை. சூரிய அஸ்தமனமில்லாத சாம்ராஜ்யம் என்ற பெருமை பேசிய பிரிட்டிஸ் அரசாங்கம், காந்தியின் சத்தியாக்கிரகம், ஒத்துழையாமை, உப்புச் சத்தியாக்கிரகம் என்ற நடவடிக்கைகளால் அதிர்ந்து போய், இறுதியில் பாகிஸ்தான், இந்தியா என்ற இருநாடுகளை உருவாக்கும் சூழ்ச்சியில் வெற்றியடைந்தனர். இன்றும் இரு நாடுகளும் மோதிக் கொள்கின்றன. அவர்களின் பிரித்தாளும் சூழ்ச்சி அந்நத அளவுக்குப் பிரசித்தம் பெற்றது. ஒரு சாம்ராச்சியத்தையே சத்தியாக்கிரகம் அசைத்து விட்டது. இத்தகைய நாட்டை இன்றும் தமது தாய் நாடாக இந்திய வம்சாவழியினர் கூறிவருவதால் இச்சத்தியாக்கிரகக் கதை நன்றாகவே எடுபட்டது. பெப்ரவரி திங்கள் 19ம் நாள் தொடங்கிய சத்தியாக்கிரகம் மலையக மக்கள் சங்க பேதமற்ற முறையில் பங்கு கொள்ளச் செய்தனர். தலைவர்களை ஒன்று சேரும்படி வலியுறுத்தினர். பி. சந்திரசேகரன், ஆறுமுகம் தொண்டமானுடன் ஒரே மேடையில் சத்தியாக் கிரக நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். தலையிலே காந்திக் குல்லாய் அணிந்தனர். அது மக்களைக் கவர்ந்தது. மலையக மக்கள் அணி திரண்டனர். மற்றத் தொழிற் சங்கங்களும் ஒன்றிணைந்தன. இளைஞர்கள், ஆசிரியர்கள், மாணவர்களும் அட்டன் பிரின்சஸ் படமாளிகையின் முன்னுள்ள சந்தியில் அணிதிரண்டனர். மேடையிலே சத்தியாக்கிரகம். தலைவர்களுக்கு தமது ஆதரவைத் தெரிவித்தனர். அரசாங்கமோ வாய் திறக்கவில்லை. எனினும் பொறுப்புள்ள அமைச்சர்கள் சத்தியாக்கிரக மேடைக்கு வந்து ஆதரவைத் தெரிவித்ததோடு தென்னிலங்கையில் இதற்காதரவான ஊர்வலங்களை நடத்தினர். ஜனாதிபதியும் வெளிநாட்டுக்குச் சென்றார் அரசு இதைப் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. முதலாளிமார் சம்மேளன ஒப்பந்தத்தை மிறியதாகக் குற்றம் சாட்டியது. நீதிமன்றம் செல்வதாகக் கூறியது. ஆனால் போராட்டம் தலைவர்களையும் மீறி ஒரு வெகுஜனப் போராட்டமாக வளர்ந்து வந்தது. தலைவர்கள் தடுமாறினர். புலிவலை



சக்தியக்கிரியை என்ற சத்தியாக்கிரகத்தை காந்தி குல்லாய் அணிந்து நடத்திக் காட்டி இறுதியில் அட்டன் பிரின்ஸ் படமாளிகைச் சந்தியிலே (அ)சக்தியக்கிரியை என்பதை மீண்டு ஒரு முறை மலையக மக்களுக்கு கூட்டி விட்ட இந்த மலையகத் தலைவர்களை இளைய மலையகம் எவ்வாறு ஏற்றுக் கொள்ளப்போகிறது என்பதை பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

பிடித்த கதை நிலைக்கு வந்தது. வரவு செலவுத் திட்டமும் சமர்ப்பிக்கப்பட்டு விட்டது. தோட்ட மக்களுக்கு எது எந்த நிவாரணமும் இல்லை. மாறாக முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு தேயிலை உற்பத்தி கூடியுள்ளது ஏற்றுமதி வருமானம் கூடியுள்ளது என வரவு செலவு உரை கூறியது. ஆனால் கம்பனிகளோ, இந்த சம்பள உயர்வை அதாவது ரூபா 400/= கொடுப்பனவை அளித்தால் கம்பனிகளை நடத்த முடியாது. அவை நட்டத்தினால் இயங்குகின்றன எனக் கூறியது. முதலாளிமார் சம்மேளனம் தனது நிலையில் தளரவில்லை.

இருந்தும் ஆறுமுகம் தொண்டமான் மற்றும் சத்தியாக்கிரக நடவடிக்கைகளில் ஈடுபட்ட தலைவர்களை நிலை தடுமாறச் செய்தது. ஆறுமுகம் தொண்டமான் தோட்டங்கள் நட்டத்தில் இயங்கினால் அவற்றை தொழிலாளர்களுக்கு பகிர்ந்தளியுங்கள் நட்டத்தில் வியாபாரம் ஏன் செய்கிறீர்கள் என வினவினார். ஒரு சில அமைச்சர்களும் போராட்டம் நியாயமானது என அறிக்கை விட்டனர். ஆனால் கம்பனிகள் இவர்களைப் பொருட்படுத்தவில்லை.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் வரவு செலவுத் திட்டத்தை தோற்கடிக்க யு. என். பி. முயற்சிகளை மேற்கொண்டுள்ளது என்ற செய்திகள் வரத் தொடங்கின. ஆறுமுகம் தொண்டமானும் அவர்களது சாகாக்களும் இறுதித் துரும்பைப் போட்டனர். உடும்பு கிடைக்காமல் போனால் பரவாயில்லை. கை வந்தால் போதும் என்ற நிலையில் அரசாங்கம் சம்பள உயர்வை அளிக்காவிட்டால் அமைச்சர் பதவியைத் துறப்பதாக அறிவித்தார். யூ. என். பி யில் வென்று பொதுசன முன்னணியில் தொடர்ந்த திரு. சௌமியமூர்த்தி தொண்டமானின் பேரப்பிள்ளைக்கு இது ஒரு பிரச்சினையல்ல. மறுபக்கம் மாறி இருப்பது மட்டுமே. கொள்கையளவில் ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் பின்பற்றுவது ஒரே கொள்கையையே என்பனவாகும். ஏனெனில் அணி மாறினாலும் தாம் பாராளுமன்ற உறுப்பினர் என்ற நிலைக்கு மாற்றம் வராது .என்பது தெளிவான விடயம் என்பதால். காலஞ்சென்ற காமினி திசாநாயக்க ஜனவர்த்தன ஆட்சியில் தோட்டத் தொழிற்துறை அமைச்சர் பதவியிலிருந்த பொழுது நடத்தப்பட்ட சம்பள உயர்வு போராட்டத்தில் நடத்திய நாடகமும் அன்று தொழிற்சற்கக் கூட்டுக் கமிட்டி வலுவுடன் செயல்பட்டதனால் சிறிய சம்பள உயர்வையாவது பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்தது என்பதையும் அன்று இன்றைய தொழிலமைச்சர் திரு. அலவி மௌலானா கூட்டுக்கமிட்டியின் சார்பில் செயல்பட்டதையும் எவரும் மறந்து விட மாட்டார்கள். காலஞ்சென்ற ஜனாப் அசீஸ் 17.50 பஞ்சப்படி போராட்டத்தை நடத்திய பொழுது 17.50 அல்ல ஒரு நாளைக்கு 1/2 ரூபா கூட்ட வேண்டும். அதாவது மாதம் 30ரூபா கூட்ட வேண்டும் எனத் தொண்டமான் போராட்டம் நடத்தி இறுதியில் காலஞ் சென்ற கலாநிதி என். எம். பெரேரா போன்றவர்களால் ஒரு நாளைக்கு 10 ரூபா வீதம் சம்பள உயர்வை பெற்றுத் தந்ததையும் தோட்டத் தொழிலாளர்கள் மறந்திருக்க மாட்டார்கள். இத்தகைய பின்னணி வரலாற்றில் தான் இறுதியாக அமைச்சரவைக் கூடித் தீர்மானித்து பொறுப்பை முன்னால் தொழிற்சங்க கூட்டுக் கமிட்டியின் தலைவரும் இன்றைய தொழில் அமைச்சருமான திரு அலவி மௌலானாவிடம் இதைத்தீர்க்க வழிதேடும் பொறுப்பையும் அவரும் தனது அனுபவங்கள் தொடர்புகள் அனைத்தையும் பயன்படுத்தி இருசாராரையும் இணக்கம் காணச் செய்து சம்பள உயர்வைப் பெற்றுக் கொடுத்தார். தலைவர் ஆறுமுகம் தொண்டமானும் அவரின் சகாக்களும் சத்தியாக்கிரகத்தை கைவிட்டனர். வெற்றியடைந்து விட்டோம் என அறிக்கை விட்டதை முதலாளிமார் சம்மேளனம் அதைப் பொருட்படுத்தவில்லை. அவர்களும் புதிய சம்பளத்தை ஏற்று அறிவித்தனர்.

இருசாராரும் ஏற்றுக் கொண்ட புதிய சம்பள உயர்வு இப்படித்தான் அறிவிக்கப்பட்டது. வேலை வழங்கப்பட்ட நாட்களில் 75% வேலை செய்தால் கீழே தரப்பட்டுள்ள முறையில் சம்பளம் வழங்கப்படும் என்பதாகும்.

ஒரு நாள் சம்பளம் இப்பொழுது வேலை செய்யும் நாட்கள் 75% மேல் கூடியவை

101 + 6 + 9 + 5 = 121.00

75 % க்கு குறைந்தால்

101 + 6 + 9 = 116/=

கூட்டு ஒப்பந்தப்படி வழங்கியது

90 % க்கு குறைந்தால்

101 + 6 + 9 = 116/=

90 % கூடினால்

101 + 6 + 14 = 121/=

உண்மையிலேயே இவர்கள் இலக்கங்களை மேலும் கீழும் நகர்த்தி தீர்வு கண்டுள்ளனர். இக்கொடுப்பனவுகளுக்கு கூட்டு ஒப்பந்தத்திற்கு முன் ஊ. சே. லா. நிதி இல்லை.

புதிய சம்பளத் திட்டத்தின் படியும் கொடுப்பனவுகளுக்கு ஊ. சே. லா. நி. இல்லை.

ரூபா 101 /= க்கு மட்டுமே ஊ. சே. லா. நி. கணிக்கப்படும்.

சக்தியக்கிரியை என்ற சத்தியாக்கிரகத்தை காந்தி குல்லாய் அணிந்து நடத்திக் காட்டி இறுதியில் அட்டன் பிரின்ஸ் படமாளிகைச் சந்தியிலே (அ)சக்தியக்கிரியை என்பதை மீண்டு ஒரு முறை மலையக மக்களுக்கு கூட்டி விட்ட இந்த மலையகத் தலைவர்களை இளைய மலையகம் எவ்வாறு ஏற்றுக் கொள்ளப்போகிறது என்பதை பொறுத்திருந்து பார்க்க வேண்டும். இந்நடவடிக்கைகள் மலையகத்தில் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதையும் மக்கள் வெகுஜனப் போராட்டத் திசைக்குத் தள்ளப்பட்டுள்ளதையும் கருத்தில் கொள்ள வேண்டும். இவ் வெகுஜனப் போராட்டம் எதிர்காலத்தில் வடக்கு கிழக்கு வெகுஜனப் போராட்டத்தோடு இணையாது என்பதற்கு எவராலும் சான்று பகர முடியாது. அந்த வேளையில் நிச்சயமாய் இத்தகைய "குல்லாய்"களை மலையக மக்களுக்கு இவர்களால் போட முடியாது என்பதை எதிர்காலப் போராட்டங்கள் நிச்சயமாக உணர்த்தும் காலம் வெகுதூரத்தில் இல்லை.

படிப்பகம்

www.padippakam.com



# சர்வதேச சமூகத்தை திருப்திப்படுத்த வேண்டிய கட்டாய நிலையில் இலங்கை அரசு உள்ளது

**அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் பொதுச்செயலாளர் குமரகுருபரன்**

> தேசிய ரீதியில் தமிழ் மக்களுக்கு இருக்கும் அச்சுறுத்தல்களை எதிர்ப்பதற்காக தமிழ் கட்சிகளுடன் இதய சுத்தியுடன் இணைந்தோம். இந்தக் கால கட்டத்தில் இதை உணராதவர்களைத் தமிழ் மக்கள் ஒரு போதும் மன்னிக்க மாட்டார்கள்.

கேள்வி : பிரித்தானிய அரசாங்கம் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளைத் தடைசெய்யும் நடவடிக்கையால், விடுதலைப் புலிகள் அமைப்பு பலவீனப்படுமா?

பதில் : எங்களைப் பொறுத்தவரையில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கு எத்தகைய தாக்கமும் ஏற்படாது. இந்த தடை அவர்களின் செயற்பாடுகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தாது. ஆனாலும் அறிவுசால் நிலையில் இருந்து பார்க்கின்றபோது, பேச்சுவார்த்தைகள் நடைபெறும் ஏது நிலையில், இத்தகைய நடவடிக்கை நல்லதல்ல என்றே கூற வேண்டும்.



கேள்வி : தற்போது சந்திரிகா அம்மையார் ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் செய்து விடுதலைப் புலிகளைத் தடை செய்யக்கோரி வருகின்றார். இது எதைக் காட்டுகிறது?

பதில் : சந்திரிகா மட்டுமல்ல, கதிர்காமரும் இதைத்தான் செய்து வந்தார். தமிழ் மக்களின் பிரச்சினையை ஏற்றுக் கொள்கின்றவர்கள், தமிழ் ஈழ விடுதலைப்புலிகளைத் தடை செய்வதில் எத்தகைய பலனும் ஏற்படப் போவதில்லை என்பதை விளங்கிக் கொள்வார்கள்.

கேள்வி : தமிழ் கட்சிகள் உள் அடங்கிய கூட்டின் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன?

பதில் : மேற்படி நாட்டில் பொது நோக்கத்திற்காகவும், தேசிய ரீதியில் தமிழ் மக்களுக்கு இருக்கும் அச்சுறுத்தல்களை எதிர்ப்பதற்காகவும், இதய சுத்தியுடன் இணைந்தோம். இந்தக் கால கட்டத்தில் இதை உணராதவர்களைத் தமிழ் மக்கள் ஒரு போதும் மன்னிக்க மாட்டார்கள். இன்றைய கால கட்டத்தில் அனைவரும் ஒன்றுபடுவது கட்டாயமானதாகும். தமிழ் ஈழ விடுதலைப் புலிகளைத் தடை செய்யக் கூடாது என அனைத்து தூதராலயங்களுக்கும் சென்றும் எடுத்துக் கூறினோம். எமது கோரிக்கை அவர்களின் காதுகளில் ஏறியதோ தெரியாது. அவர்கள் அரசுக்குச் சார்பாகவே செயற்பட்டுள்ளனர். ஆனாலும் நாம் தொடர்ந்து கூட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவோம்.

கேள்வி : சர்ச்சைக்குரிய விடயமாக மாறி இருக்கும் வலிகாமம் வடக்கு காணிப்பிரச்சினை சம்பந்தமாக தங்களின் கருத்து என்ன?

பதில் : நானும், திரு. விநாயகமூர்த்தி அவர்களும், அண்மையில் இது சம்பந்தமாக பத்திரிகையாளர்களுடன் ஒரு சந்திப்பை ஏற்படுத்தினோம். வலிகாமம் மக்கள் தமது சொந்தக் காணிகளுக்குச் செல்வதை ஏன் தடை செய்ய வேண்டும். வலிகாமம் பகுதியில் வாழ்ந்த சட்ட அறிஞர்கள் கூட இதற்கு எதிராக வழக்கு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். இவை யாவற்றையும் அரசு நசுக்கப் பார்க்கிறது. இப்பகுதி மக்களை வேறு இடத்தில் குடியிருக்க எடுக்கும் முயற்சி, கபட நோக்கமுடையதாகும். இராணுவக் குடும்பங்களை இப்பகுதிகளில் குடியேற்றுவதற்கு அரசு முயற்சிக்கலாம். இதை அனைத்துத் தமிழ் மக்களும் ஒன்றிணைந்து எதிர்க்க வேண்டும்.

கேள்வி : தற்போதைய நிலையில் மனித உரிமை மீறல்கள் என்ன நிலையில் உள்ளன?

பதில் : தமிழ் கட்சிகளின் கூட்டமைப்பில் இணைந்து தூதராலயங்களுக்குச் சென்றபோது, மனித உரிமை மீறல்கள் குறித்து தெளிவுபடுத்தியிருந்தோம். அண்மைக் காலத்தில் பிந்துனுவெவ, மிருசுவில், கோபாலபுரம் போன்ற பகுதிகளில் இனப்படுகொலைகள் நடந்துள்ளன. கொலை நடவடிக்கைகளில் ஈடுபட்ட இராணுவத்தினரின் மனநிலை வெறியாக மாறியிருக்கிறது. இறந்தவர்களின் கண்களைத் தோண்டவும், ஐந்து வயதுக் குழந்தையின் அவயவங்களை வெட்டவும், கொலைகாரர்கள் துணிந்துள்ளனர். இதை வெறி என்றே கூற வேண்டும். இறுதியாக நடைபெற்ற கோபாலபுரம் படுகொலை நடவடிக்கையில் கடற்படையினர் திட்டமிட்டே செயற்பட்டுள்ளனர். கோபாலபுரம் நடவடிக்கையில் வெளிநாட்டுத் தூதரகத்தின் நிர்ப்பந்தத்திற்கு அரசு முகம் கொடுக்க வேண்டியதால், சில நடவடிக்கைகளை எடுத்தது. தெஹிவளையில், சில இளைஞர்கள் கைது செய்யப்பட்டதால், அங்கு பதட்டம் நிலவியது. அண்மைக்காலத்தில் பெரியளவு மீறல்கள் பற்றிய செய்திகள் வெளிவரவில்லை. இதன் அர்த்தம் மனித உரிமை மீறல்கள் நடைபெறவில்லை என்பதல்ல.

கேள்வி : அரசின் 2001ம் ஆண்டு வரவு செலவுத் திட்டம் பற்றி தாங்கள் என்ன கூறுகின்றீர்கள்?

பதில் : பாதுகாப்பு செலவிற்கு மேலும் நிதி ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டுள்ளது. நாணய பெறுமதி இறக்கத்தால் பொருட்களின் விலையும், வாழ்க்கை செலவும் அதிகரித்த நிலை காணப்படுகிறது. தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் யுத்தம் நிறுத்தம் செய்திருக்கும் இவ்வேளையில், அரசு மிகப்பெரிய அளவு பணத்தை யுத்தத்திற்கு ஒதுக்கி இருக்கிறது. எமது கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர், திரு விநாயகமூர்த்தி வரவு செலவுத் திட்டத்திற்கு எதிராகவே வாக்களித்துள்ளார். வெளிநாட்டுக்குத் தொழில் நிமித்தம் செல்வோருக்கு பல்வேறு சலுகைகளை வழங்க முன்வரும் இந்த அரசு, இந்த நாட்டின் நலனுக்காக வியர்வை சிந்தும் மலையக தொழிலாளர்களுக்கு 400/= ரூபா சம்பள உயர்வை வழங்க ஏன் பின்னடிக்கிறது.

கேள்வி : மலையக மக்களின் சம்பள உயர்வுக் கோரிக்கை தொடர்பாக மலையக தலைவர்களுக்கு என்ன ஆலோசனையை முன் வைக்கிறீர்கள்?

பதில் : இந்த விடயத்தில் அரசுடன் இணைந்திருக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர்களைப் பார்த்து கூறுகின்றோம். அரசு 400 ரூபா சம்பள உயர்வை மலையக மக்களுக்கு வழங்க மறுப்பின் அரசுடன் இணைந்திருப்பதால் அர்த்தம் இல்லை. மலையக மக்களை நாம் ஒரு தேசிய இனமாகவே பார்க்கின்றோம். ஒரு தேசிய இனத்துக்குரிய எல்லாத் தகுதிகளும் மலையக மக்களுக்கு உள்ளது. மலையக மக்களை இந்த அரசு இரண்டாந் தர பிரசைகளாகவே நடத்துகின்றது.

கேள்வி : வடக்கு கிழக்கில் இடம் பெற்று வரும் வெகுஜன போராட்டங்கள் தொடர்பில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் ஏதாவது போராட்டங்களை முன் எடுக்கும் ஆயத்த நிலை உண்டா?

பதில் : வெகுஜன போராட்டங்களை முன் எடுக்கக்கூடிய ஏது நிலை இல்லை. இதற்காக நாம் முற்றாக போராட்டங்களில் இருந்து விலகவில்லை. யாழ் பல்கலைக்கழக மாணவரின் போராட்டத்திற்கு ஆதரவாக எமது பாராளுமன்ற உறுப்பினர் திரு. அப்பாபிள்ளை விநாயகமூர்த்தி செயற்பட்டார். திருகோணமலையில் நடந்த போராட்டத்தில் எமது கட்சியின் திருகோணமலைச் செயலாளர் முழு அளவில் தனது பங்களிப்பை வழங்கி இருந்தார். மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெற்ற மாணவ போராட்டங்களுக்கு எமது கட்சியின் கல்குடா பிரதிநிதி நல்ல பங்கை வகுத்துள்ளார். கொழும்பில் ஒரு போராட்டத்தை நடத்துவதற்கு நாம் முயற்சி எடுத்தோம் அது சாத்தியப்படவில்லை.

கேள்வி : தமிழ் தேசிய இனப்பிரச்சினையில் சர்வதேச சமூகத்தைத் திருப்திப் படுத்தும் அளவுக்கு இலங்கை அரசால் முன்னேற முடியுமா?

பதில் : சர்வதேச சமூகத்தை திருப்திப்படுத்த வேண்டிய கட்டாய நிலையில் இலங்கை அரசு உள்ளது. ஆனாலும் பலம் பெற்று இருக்கும் சிங்கள, பௌத்த பேரினவாதத்திற்கு எதிராக இந்த அரசு செயற்படுமா? என்பது சந்தேகமே.

கேள்வி : தென் இலங்கை முற்போக்கு சக்திகளுடன் இணைந்து போராடுவதற்கு அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தயாரா?

பதில் : இது நல்ல கேள்வி. எமக்கு இதில் முழு விருப்பம் உள்ளது. அண்மையில் கூட தென் இலங்கை முற்போக்கு சக்திகளுடனான ஒரு சந்திப்பை ஏற்படுத்தினோம். தமிழ் கல்விமான்களின் விருப்பமும் இதுவாகவே உள்ளது. தமிழ் கட்சிகள் தென் இலங்கை முற்போக்கு சக்திகளை இணைக்கும் விடயத்துக்கு என்னையும் மனோ கணேசனையும் பொறுப்பாக்கி உள்ளன. உண்மையில் இலங்கை இடதுசாரி கட்சிகள், யதார்த்த நிலையில் இருந்து பாராது, அதி தீவிர நிலையில் இருந்து தமிழ் மக்களின் பிரச்சினையைப் பார்க்கின்றனர். எது எப்படி இருந்தாலும் இவர்களின் ஒத்துழைப்பு எமக்கு மிக அவசியமாகும். எதிர்காலத்தில் இத்தகைய நடவடிக்கைகள் வலுப்பெறும் என்றே நம்புகிறேன்.

## அமெரிக்க தூதுவரின் கருத்துக்கு வடமாகா… ஆசிரிய சங்கம் க…

கடந்த 07.03.2001 (புதன் கிழமை) …
ரிக்க தூதர் அஸ்லி வில்ஸ் யாழ்ப்ப…
தில் ஆற்றிய உரையில் வடக்கு, க…
தமிழர் பூமி தொடர்பாகக் குறிப்…
கருத்துக்கள் மக்கள் மத்தியில் …
சைகளை உருவாக்கியுள்ளது. நாடு…
திரம் பெறுவதற்கு முன்னர் இருந்தே …
கையர் என்ற தேச பக்தி உணர்…
செயற்பட்டவர்களின் முயற்சியால் …
பிக்கப்பட்ட ஒரு அமைப்பு என்ற …
யிலும் 1978 ஆம் ஆண்டில் காலியில் …
பெற்ற வருடாந்த மாநாட்டிலேயே …
மக்களின் சுயநிர்ணய உரிமையை …
கொண்டதும் சகல மக்களையும் கொ…
துமான ஓர் அமைப்பின் கிளை என்ற …
யிலும் இது தொடர்பான கருத்து வெ…
வேண்டிய கடப்பாடு எமக்கு உண்டு …
கருதுகின்றோம்.

தமிழ் மக்கள் வன்முறை மீது …
கொண்டோ, வெறும் வீரசாகசச் …
க்கோ போராட்டத்தை ஆரம்பிக்கவி…
தூதுவர் குறிப்பிட்டதைப் போல் …
சமத்துவத்துடனும், மதிப்புடனும், …
யாதையுடனும் வாழ்வதற்கு வகை …
தீர்வையே அவர்கள் எதிர்பார்க்கின்…

இலங்கை ஒரு பல்லின, பலமத, பல கல…
நாடு என்பதை ஏற்று சகல தரப்பினரும் …
ந்து ஒரு சுதந்திர நாட்டைக் கட்டி…
முடியும் என்ற எண்ணத்துடனேயே தமிழ்…
சுதந்திரம் தொடர்பான செயற்பாடுகளி…
கோர்த்துச் செயற்பட்டுள்ளனர். 1930 …
அமரர் S.W.R.D பண்டாரநாயக்கா…
சமஷ்டிக் கோரிக்கை முன் வைக்கப்பட்ட…
அது தமிழர்களின் கவனத்தைப் பெறவி…
அந்த அளவிற்கு பெரும்பான்மை மக்கள்…
நம்பிக்கை கொண்டோராய் அவர்கள் …
தனர்.

இலங்கையின் முதலாம் பாராளும…
திலேயே நாட்டின் பொருளாதார…
முதுகெலும்பாக இருந்த மக்களின் …
ரிமைகள் பறிக்கப்பட்டபோது கூட …
எதிர்ப்பைக் காட்டக்கூடிய நிலை…
அவர்கள் இல்லை. திட்டமிட்ட குடி…
றங்களினால் தமது சமூக வாழ்க்கை…
க்கப்பட்ட போதெல்லாம் சகிப்பு…
மையையே பேணி வந்துள்ளனர்.

இலங்கையில் பல தேசிய இனங்கள் …
வதை ஏற்ற தேசிய இன அடிப்படை…
கருத்து கூட தமிழ்க் கட்சிகளா…
முதன் முதலில் முன் வைக்கப்பட்ட…
கூறமுடியாது. சோல்பரி அரசியல் ஆ…
க்குழுவிற்கு இலங்கைக் கம்யூ…
கட்சியினாலேயே முன் மொழிவாக …
கப்பட்டுள்ளது. அதிகாரத்தைக் கை…
றும் தந்திரமாக இனவாதிகளால் …
பட்ட பேரினவாத சக்திகளாலும் …
போக்கிலே பேரினவாத இராணுவத்…
தமது உயிர், உடமைகள் கொள்ளை…
டப்பட்ட பின்னரே தற்காப்பு நட…
கையாக இப்போராட்டம் ஆரம்பமான…

இன்று கூட அரச எந்திரத்தின் பேரி…
வெறி தணிந்துவிட்டது, என்று கூ…
யாது. தமிழ் மக்களின் அபிலாஷை…
ஓரளவிற்கு ஏனும் நிறைவு செய்யும் …
எதிர்பார்க்கப்பட்ட அரசியல் முன் …
வுகளை "கழுதை தேய்ந்து கட்டெறு…
கதை " யாகத் திருத்தப்பட்டதும் …
னைக்கூட நிறைவேற்றமுடியாத பா…
மன்றம் இதற்குச் சான்று பகரும். …
எதிரணியில் நின்று தொழிற்பட்ட…
இன்று கூட அமைச்சரவையில் உள்…
இந்த யதார்த்தம் புரியப்பட்டு நடு…
யாக அணுகப்படாத தீர்வு எதுவும் …
மக்களின் எதிர்பார்ப்பை ஈடுசெய்யும் …
கூறமுடியாது.

சா. தியாகலி…
தலை…

www.padippakam.com



# நோபல் பரிசும் கொரியாவும்

ந்த மாதங்களில் வெளி-
நாபல் பரிசு பற்றிய செய்-
எம்மை எங்காவது கவன்
செய்ததா எனப் பார்ப்-

அதுதான் தென் கொரிய
க்கான நோபல் பரிசு பற்-
றிவிப்பு இவ் திடீர் அறிவிப்பு
ாப் போல் பலருக்கும்
சியை ஏற்படுத்-
க்கும் என
றேன்.

வரை
விப் பட்
முடியாத
னம் அது.
யோ தகுதி
யோ நோபல்
காக தெரிவு
ப்படுவோரை
ஆண்டுகளில்
ா வ ி ப -
நக் கிறோம்.
ப் இந்த தென்
ப அதிபருக்கான
டுதியான செய்தி-
இதன் பின்னணியில்
டு இருந்து செயற்படு-
அந்த நாடே இதனை-
றிவிக்கும் என்பதும்
|.

மாதங்களாக வட
பா, தென்
ியாச்



பலர்
திருப்பர். இதன்
லிதான் இந்த சமாதான
பரிசு.

ாபல் பரிசு என்பது எந்த
ில் வழங்கப்படுவது என்-
அது தோன்றிய வரலாறும்
கும் தெரிந்த விடயம் என்-
அது பற்றி விளக்கம்
யில்லை. தற்சமயம்
ப நாட்டின் தலைவருக்கு
பரிசு என்றால் - அங்கு
ம் மாணவர்களின் எழுச்சிப்
டங்களை எப்படி அடக்கி
முடிகிறது?

0ம் ஆண்டில் அமெரிக்க
வ உதவியுடன் மூன்று
கள் கடும் போர் வடகொரி-
இடம் பெற்றது. இதில்
இலட்சத்திற்கும் மேலா-
ள் அமெரிக்க படையால்
ப்பட்டனர். பல நகரங்கள்,
ங்கள் வீதிகள் யாவும்
அழிந்தது. இக் கொலை-
கெல்லாம் மன்னிப்புக்
ரா? ஒரு நாட்டின் புதிய
ர் முன்னர் நடந்த சம்ப-
ருக்காக மன்னிப்புக்
த நாகரீகமானது. இப்போ
கொரியாவில் நிலை
டுள்ள 40,000 வரையான
க்க இராணுவம் உணவுற்-
ில் ஈடுபடுகிறார்களா?
அவர்கள் சும்மா இருந்து
டு பூமிக்குப் பாரமாக உள்-
ள். இதனை இன்றைய
கொரிய தலைவர் எப்படி
ள்கிறார், அல்லது பார்க்-
ர் இப்படி பல்வேறு கேள்-
ாத் தொடுக்க முடியும்.

கு விடயம் என்ன-
ால் வடகொரியாவை
ிச அரசியல் ஆட்சியில்

இருந்து முதலாளித்துவ நாடாக தென் கொரியாவுடன் இணைவை ஏற்படுத்தும் ஒரே காரணம் தான் என்பது எமக்குப் புரியாமல் இல்லை.

உண்மையிலேயே வட கொரி-யாவுடன் தான் தென் கொரியா இணைய வேண்டிய தேவை உள்ளது. இதனையே மானிடத்தை நேசிப்பவர்களும், மனித குலமும் விரும்பும், வரவேற்கும். ஏனெனில் எந்தத் தாழ்வு அற்ற பொருளாதார உரிமையும் சுரண்டல் அற்ற சமுதாயமும் அம் முறைமையும் அங்கு நிலவுகின்றது.

உலகில் மனித உரிமைக-ளையும், ஜனநாயக விழுமியங்-களையும் கடைப்பிடிக்கும் நாடு-களில் ஆறாவது இடத்தில் வட கொரியா இருப்பதாகக் கணிப்பீடு-கள் தெரிவிக்கின்றன. இங்கு முதலாவது இடத்தில் நோர்வே நாடு என்பதும் குறிப்பிடத்தக்கது. இவற்றுக்கு அப்பால்தான் அமெ-ரிக்கா உள்ளது. அமெரிக்கா-வால் அனுப்பப்பட்ட பிரிட்டன் பிரதமர் வடகொரியா சென்று அன்பாக வார்த்தைகள் பேசி சும்மா இருக்கும் வடகொறியாவை தன் நேச நாடாக்கி விட முயன்று பொருளாதார ஒப்பந்தங்களும் செய்து கொள்ள முயன்றுள்ளது. இது எல்லாம் எதைக் காட்டுகின்றது என்றால் வட தென் கொரியாக்களை இணைப்பது என்பதற்கு அப்பால் தென் கொரி-யாவுடன் தான் வடகொரியாவை இணைக்கும் முயற்சியாகும். எங்-கும் இல்லாத அக்கறை இப்போது தொற்றிக் கொண்டுள்ளது. சோசலிச ஜனநாயக சமுதாயம் உலகில் மலர்வதை முதலாளித்-துவத்தால் பொறுத்துக் கொள்ள முடியாது என்பதையே இவை காட்டி நிற்கின்றன.

சோசலிச கம்யூனிச சித்தா-ந்தங்களையும் அந்த நாடுகளை உடைப்பது என்பதும் இப்போது தெரியாமல் அல்லது விளங்கா-மல் இருக்கலாம். ஆனால் எதிர்-காலத்தில் "தன் வினை தன்னைச் சுடும்" என்பது போல் உலகெங்கும் அராஜகம் வளர்ந்து தனிநபர், குளு மோதல்களும் கட்டுக்கடங்கா கொலைகளும் கொள்ளைகளும் தாண்டவம் ஆடப்போகின்றது. ஆட ஆரம்பித்து விட்டது, என்ப-தையே பார்க்க முடியும். அந்த நாட்கள் வெகு தூரத்தில் இல்லை என்பது வெள்ளிடைமலை. அப்படி நடக்கும் போது "கண் கெட்டபின் சூரிய நமஸ்காரம்" என்பது போல் தான் இருக்கும். ஆகவே இதனை இச்சந்தர்ப்பத்தில் அழுத்தமாக சுட்டிக்காட்ட கடமைப்பாடுடை-யேன்.

மேலும் ஏற்கனவே தான் தலை-யிட்ட பாலஸ்தினர்களின் உரிமை-கள் கொசோவோ தீர்வுகள் தீர்வு காணாத நிலையில் எந்த அவசரமும் இன்றி வட கொரி-யாவின் நோட்டம் நாட்டமாக மாறிவிட்ட நிலையில் தென் கொரிய அதிபருக்கு சமா-தான மாலை அணிவித்-துள்ளது அமெரிக்கா.

அத்தோடு மட்டும் விடவில்லை. ஆசிய ஐரோப்பிய மகாநாடு ஒன்றை இதற்காகவே ஆரம்பித்து வர்த்தக மகாநாடு என பெயர் சூட்டி ஆக 25 நாடுகளுடன் நடந்தேறியுள்ளது. பொருளாதாரத் தடைகள் என்பது கூட ஏன்? எதற்-காக? என்றில்-லாமல் சுய விருப்-பத்தின் பேரில் நடைபெறுவதாகும். இதுகூட பூமியின் எல்லைக்கோடுக-ளுக்கான மீள் வரையறைகள் தான் எல்லைகள் அற்ற மனிதர்களை எல்லைப்படுத்தி தண்டிப்பதாகும்.

வடகொரியா பற்றி பார்த்தோ-மானால் கொரிய நாடு முழுவதும் இரண்டாம் உலக யுத்தத்திற்கு முன்னர் யப்பான் நாட்டின் காலனித்துவ நாடாக இருந்தது. அக்கால கட்டத்தில் கொரியாவில் உள்நாட்டு புரட்சிமூலம் யப்பானிடம் இருந்து விடுபட போராட்டம் நடைபெற்றது. அப்போராட்டத்தில் கொரியாவின் ஒருபகுதியான வட-பகுதி மட்டுமே மீட்கப்பட்டது. அக்-கால கட்டத்தில் அதாவது இரண்டாம் மகாயுத்தம் முடிவுறும் காலமாதலால் யப்பானிடம் இருந்து ஏனைய பகுதிகளைக் கொரிய புரட்சிப் படையினர் கைப்பற்றுவதற்-கிடையில் அதாவது மீட்கும் கடைசிக் காலகட்டத்தில் அமெ-ரிக்கா தலையிட்டு தென் பகுதியை ஆக்கிரமித்தது. எதிரியாக இருந்த யப்பான் இது விடயத்தில் நண்ப-னாகியதும் வரலாறு. தென் கொரியா தற்போது ஓர் அமெரிக்க சார்பு நாடாகவும் அன்று யப்பானி-யர்களின் ஆட்சியை ஆதரித்த நிலப்பிரபுக்களும் முதலாளிகளும் இன்று ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ளனர். அன்று துணைபோனவர்கள் இன்றும் தென்-கொரிய மக்களின் கிளர்ச்சி-களையும் இரும்புக் கரங்கொண்டு அடக்கவே செய்கிறார்கள். இவற்-றுக்குத்தானா நோபல் பரிசு?

**செ. தனபாலன்.**
**பேளின், ஜேர்மனி**

# கை கால் வழங்காத பெண் மீது பாலியல் பலாத்காரம்



மொழி தெரியாத மருத்து-வரால். நிரந்தர உபாதைக்கு உட்பட்ட நயினாநாமணி காமுகர்களின் வெறித்தனத்-துக்கும் ஆளாகியுள்ளார். பொலிசாரும் பாராமுகமாக இருந்துள்ளனர்.

மொழி தெரியாத மருத்துவரால். நிரந்தர உபாதைக்கு உட்பட்ட நயினாநாமணி காமுகர்களின் வெறித்தனத்துக்கும் ஆளாகி-யுள்ளார். பொலிசாரும் பாராமுக-மாக இருந்துள்ளனர்.

கொரனை பொக்குனுவிட்ட பகுதியைச் சேர்ந்த நயனாநாமணி என்ற 17 வயது இளம் பெண்-ணுக்கே இப்பரிதாபம் நிகழ்ந்துள்-ளது.

பாதிக்கப்பட்ட பெண்ணின் தாயார் தனது மகளுக்கு நிகழ்ந்த அநி-யாயத்தை கேட்பவர்களின் நெஞ்-சுருகும் வண்ணம் கூறியுள்ளார்.

விஜயலதா என்னும் பெயருடைய பெண் பொலநறுவையில் திரு-மணம் செய்துள்ளார். கணவன் வேறு பெண்ணுடன் தொடர்பு வைத்ததால் தனது ஊரான கொரணை பொக்குனுவிட்டக்கு திரும்பி தனித்து சீவியம் நடத்-தினார். விஜயலதாவுக்கு நயனா-நாமணி 1983 ல் பிறந்துள்ளார்.

குழந்தைக்கு சுகயீனம் ஏற்பட்டபோது. மருத்துவமனைக்குச் சென்றுள்ளார். மருத்துவமனையில் குழந்தையைப் பரிசோதித்த சீன மருத்துவர் குழந்தைக்கு வலி வரப் போகிறது ஊசி போட வேணும் என்றுள்ளார். குழந்தையை பரிசோதித்த சீன மருத்துவருக்கு சிங்களம் தெரியாது. மருத்துவ உதவியாளருக்கு ஆங்கிலம் தெரியாது. எனவே 1 மாத குழந்தையை உதவியாளர் 12 மாத குழந்தை என தவறான மருத்துவத்துக்குக் குழந்தையின் வயதைக் கூறியுள்ளார் உதவியாளர். கூற்றை நம்பிய சீன மருத்துவர் நான்கு ஊசிகளைப் போடுமாறு பணித்துள்ளார். இங்ஙனம் 4 நாட்களுக்கு 16 ஊசிகள் குழந்தைக்குப் போடப்பட்டுள்ளது. இதனால் குழந்தையின் ஒரு பகுதி செயல் இழந்துள்ளது. இதன் பின்னர் குழந்தையைப் பரிசோதித்த சிங்கள மருத்துவர். குழந்தைக்கு தவறான சிகிச்சை அளிக்கப்பட்டதாகத் தாய்க்குத் தெரிவித்துள்ளார்.

மிகவும் ஏழையான விஜயலதா பாதிக்கப்பட்ட குழந்தையை வளர்ப்பதற்காக பல்வேறு இடங்களில் சிறு வேலைகள் செய்து வந்துள்ளார். தான் வேலைக்குப் போகும் போது வயது முதிர்ந்த தாயாரிடம் குழந்தையைக் கொடுத்துவிட்டுச் செல்வது வழக்கமாக இருந்தது.

விஜயலதா வீட்டுக்கு முன் வீட்டில், வாழ்ந்த பெண் அடிக்கடி வெளிநாட்டுக்குப் போய் வருபவர். இப் பெண்ணுக்கு மூன்று ஆண்கள் உள்ளனர். இப்பெண்மணி ஒரு தரம் வெளிநாட்டில் இருந்து வரும்போது உடம்பை விறைக்க வைக்கும் கருவியைக் கொண்டு வந்துள்ளார்.

ஒரு நாள் விஜயலதா வேலைக்குச் சென்ற சமயம் நயனாநாமணி பேத்தியாருடன் வீட்டில் இருந்துள்ளார். பேத்தியார் கடைக்குச் சென்ற சமயம் பார்த்து. முன் வீட்டு இளைஞர்கள். நயினாநாமணி மீது பாலியல் பலாத்காரம் புரிந்துள்ளனர். உடம்பை விறைக்க வைக்கும் கருவியால் உடம்பை விறைக்க வைத்து விட்டே இப்பாதகத்தைப் புரிந்துள்ளனர். கடைக்குச் சென்று திரும்பிய பேத்தியார் நயினாநாமணி மயங்கிய நிலையில் இருந்ததைக் கண்டு கூக்குரல் இட்டுள்ளார். இதன் பின்பே நடந்தவை அம்பலத்துக்கு வந்தது.

தனது மகளுக்கு நடந்ததைப் பொலிசாரிடம் விஜயலதா முறை-யிட்டுள்ளார். ஒரு முறை விசாரிக்க வந்த பொலிசார் பின்பு அந்தப்பக்கம் வரவில்லை என விஜயலதா கூறுகின்றார். பாலியல் வல்லுறவு புரிந்த இளைஞர்கள் தொடர்ந்தும் தனது குடும்பத்துக்கு அச்சுறுத்தல் விடுத்து வருவதாக விஜயலதா தெரிவித்துள்ளார்.

இலங்கையில் வசதி படைத்தவர்களின் பிள்ளைகளுக்கு பிரச்சினை வந்தால் மாத்திரமே விடயம் அம்பலப்படுத்தப்படுகிறது. ஏழைகள் விடயத்தில் ஏனோ தானோ என்றே விடப்படுகிறது.

நயினாநாமணி மீது எவ்வளவு மோசமான சிகிச்சை வழங்கப்பட்டு இருக்கிறது. இதனால் இக்குழந்தையின் வாழ்க்கையே நிரந்தர பாதிப்புக்கு உள்ளாகி உள்ளது. இதன் பின்பு காமுகர்களால் குழந்தைக்கு மிக்க கொடுமையான கொடூரம் இழைக்கப்பட்டுள்ளது. பொலிசாரும் ஏழைகள் விடயத்தில் தங்கள் அசிரத்தையை நிறைவாகவே செய்துள்ளனர். தமிழ் மக்களுக்கு எதிராக ஊழையிடும் இனவாதிகளும் இந்த விடயங்கள் பற்றி அதிகம் அக்கறை காட்டுவதில்லை. நகர் புறங்களில் இருக்கும் பணவலிமை படைத்தவர்களுக்கு மட்டுமே நாடு சொந்தமானதாக மாறியுள்ளது.

படிப்பகம்

# பெண்களே விழியுங்கள்!

மார்ச் மாதம் 8ம் திகதி உலகெங்கும் மகளிர் தினம் கொண்டாடப்பட்டது. இது ஒரு மகிழ்ச்சிக்குரிய விடயமே. ஏன் எனில் உலகரங்கில் பெண் தனக்கென ஒரு நாள் ஒதுக்கப்பட்டு அதற்கான நாளினை உலகெங்கும் சிறப்பாக கொண்டாடுவதும் ஒரு சிறப்பு ஆகும். எனினும் அந்த ஒரு நாளை மகளிர் தினம் என்பதற்காக நாம் மகளிர் பெருமைகளைப் பேசிவிட்டு ஓய்ந்திருத்தலாகாது. ஏனெனில் பெண்களாகிய நாம் உலகத்தில் எந்த மூலையில் வாழ்ந்தாலும் எத்தனையோ எத்தனையோ அடக்கு முறைகளுக்கும் வன்முறைகளுக்கும் பல வடிவங்களில் தூண்டப்படுவதினை அன்றாடம் நாம் வாழ்வில் அவதானிக்க முடிகின்றது. எதையும் பேசுவதனை விடுத்து அதற்குரிய செயல்முறையில் ஈடுபடுவதே சிறந்தது ஆகும். உலகத்தில் உள்ள பெண்களில் பலர் ஏதோ ஒரு வகையில் அடக்கு முறைகளுக்குட்பட்ட முறையிலேயே பெண்கள் வாழ்வதாக பல ஆய்வுகள் தெளிவுபடுத்துகின்றன.

தென்னாசிய நாடுகளில் பெரும்பாலும் பெண்பிள்ளைகளை வாரிசாக பெறுவதினை விட ஆண் வாரிசினையே பெறுவதையே அதிகமாக விரும்புகிறார்கள். இதற்கு காரணம் தாம் ஒரு பெண்ணைப் பெற்றால் பல சிக்கல்களை எதிர்நோக்க வேண்டிவரும். இச்சிக்கல்களுக்கு முகம் கொடுக்காது தாம் தப்ப வேண்டும் எனில் ஆண் வாரிசை பெறுவதையே சிறப்பாகக் கருதுகின்றனர். ஏனெனில் ஒரு பெண்ணை பெற்றால் சீதனம் கொடுக்க வேண்டும், அவளிற்கு ஒரு களங்கம் வராது பாதுகாக்க வேண்டும் என பல சமூகச் சிக்கல்களுக்கு அஞ்சி இவர்கள் இப்புமிக்கு ஒரு பெண் வாரிசின் வரவையே அனுமதிக்காது அக்குழந்தை பெண் என அறிந்தவுடன் அதனை கருவிலேயே அழிக்கின்றார்கள். இத்தனைத் தடைகளைத் தாண்டியும் ஒரு பெண் சிசு பிறந்தால் அதன் அடுத்த நிமிடமே அதன் மரணம் நிட்சயிக்கப்படுகிறது. இதற்கு கள்ளிப்பால், நெல்லு என்பவற்றை பயன்படுத்தி அதனை அழிக்கின்றனர். இத்தனைக்கும் அக்குழந்தை செய்த பாவம் என்ன ஒரு பெண்ணாக பிறந்துதான். இது குழந்தை செய்த குற்றமா? இக் கொடுமைகள் பெரும்பாலும் இந்தியரின் கிராமப்புறங்களிலேயே இடம் பெறுகின்றன.

தற்காலத்தில் பெண்கள் அனைவரும் பாரதியார் கண்ட புதுமைப்பெண்ணாக சகல துறைகளிலும் வீரநடை போடுகின்றனர். பின்பு ஏன் இப்பெண் சிசுக்கொலை. ஆண்களுக்கு ஈடாக பெண்கள் இன்று பாரினில் சிறப்புற்றுக் காணப்படுகின்றனர். உதாரணமாக, அரசியல் துறை, விஞ்ஞானத்துறை, கணணித்துறை, மருத்துவதுறை, கல்வித்துறை என எல்லாத்துறைகளிலும் மேலோங்கியிருக்கின்றனர். தற்போதைய ஆய்வுகளின் படி ஆண்களை விட அதிகம் கற்பவர்கள் பெண்கள் என்றே கூறப்படுகிறது. மேலும் சில தொழிற்துறைகளுக்குப் பெண்களே பொருத்தமானவர்கள் என கூறுகின்றனர் உதாரணமாக, ஆசிரிய தொழிலுக்கு பெண்களே சிறந்தவர்கள் என உளவியலாளர்கள் கூறுகின்றனர். இவ்வாறு பலவழிகளிலும் பெண்களின் சிறப்புக்கள் மேன்மையாக காணப்படுகின்றபோதும் இப்பெண்கள் ஆண்களினால் ஏற்படும் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியவர்களாகக் காணப்படுகின்றனர்.

ஆண்களில் பலர் பெண்களின் கற்புக்கு முக்கியத்துவம் கொடுத்து கதைப்பதினை நாம் காணலாம். "கற்பு" என்பது ஆண், பெண் இருவருக்கும் பொதுவாக பேணப்படுகின்ற ஓர் ஒழுங்கு முறையே ஆகும். இங்கு கற்பு என்னும் போது பண்டைக்காலம் முதல் பெண்களின் கற்பு பற்றியே பேசப்பட்டு வருகிறது. உதாரணமாக, கற்புக்கு கண்ணகி என்றும், நளாயினி என்றும் கூறுவர். மேலும் கற்பு என எமது சமூகத்தில் இவ்வளவு கருதுகின்றனர் அதாவது பெண்களின் கன்னித்தன்மையை இழந்தால் அவள் கற்பு இல்லாதவள் எனக்கூறுவர். அதாவது பெண் விரும்பாமல் வல்லுறவு மூலம் கற்பு இழக்கப்பட்டாலும் அவள் கற்பு அல்லாதவள் என்கிறது இச்சமுதாயம். ஆனால் ஆண் மகனொருவன் விரும்பியே தனது கற்பினை மீறி நடந்தால் அது அவனது ஆண்மைத்திறன் எனக் கூறுவர். இங்கு கவனிக்கப்பட வேண்டியது உணர்வுகள் என்பது ஆண்களுக்கும், பெண்களுக்கும் ஏற்படும் இயற்கையான ஒன்று. எனவே இருவரும் ஒழுக்க முறையை பேணுவதே சிறந்தது.



பாலியல் வல்லுறவுக்குட்பட்ட பெண்கள் பலர் தற்கொலை செய்து கொள்கிறார்கள் என அண்மைக்கால ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள் உதாரணமாக மொனராகலை மாவட்டத்தில் 15 வயதுச்சிறுமியை தந்தை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியமையால் அவள் தன்னை தானே தீமூட்டிப் பரிதாபமாக இறந்த சம்பவம் அனைவரது நெஞ்சத்தையும் உருக வைத்தது.

ஆனால் இங்கு பெண் கற்புள்ளவளா என ஆராயும் சமுதாயம், ஆண் கற்புள்ளவனா என ஆராயத்தவறுகின்றது. இது ஏன், ஒழுக்க நெறி என்பது ஆணுக்கும், பெண்ணுக்கும் பொதுவான ஒன்றே.

மேலும் இன்றைய நாகரிக நிலையிலும் கூட பெண்களுடைய உறுப்புகள் சில வர்ணனைக்குட்படுத்தப்படுவது வேதனைக்குரியது. எமது சங்க கால இலக்கியம் முதல் இன்றைய இலக்கியங்கள் வரை பெண்களின் மார்பகத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றது. இவ் மார்பகம் பெண்களுக்கு இயற்கையாக படைக்கப்பட்ட ஓர் உறுப்பு ஆகும். அதாவது குழந்தைகள் தமது பிள்ளைகளுக்கு பாலூட்டுவதற்குரிய உறுப்பே இது. ஆனால் இவர்களின் பார்வையில் இது ஒரு காமப்பொருளாக வர்ணிக்கப்படுவதனை அவதானிக்க முடிகின்றது. தமிழ் இலக்கியங்களில் இவற்றை "கொஞ்கை" "இளமுலை மடவார்" "ஸ்தனம்" என பல சொற்களால் அழைக்கப்படுகின்றனர். இவைகள் இன்றைய எமது தமிழ் பாடநூல்களான ஆண்டு 11, உயர்தர வகுப்பு பாடநூல்களிலும் இடம் பெறுகின்றன. இங்கு பெண்களது மார்பு ஒரு காமப்பொருளாக சுட்டப்படுகின்றது. உதாரணமாக "குரும்பை இள முலையினர்", "பூண் முலை மங்கையர் " என பல சொற்றொடர்கள் பிரயோகிக்கப்படுகின்றது. இதனை கற்கும் மாணவன் எந்தவிதமான உணர்வினைப் பெறுவான் எனச் சற்று சிந்தியுங்கள்.

இதனைவிட இன்றைய தமிழ் சினிமாக்கள் மிகவும் மோசமான வகையில் பெண்களின் உறுப்புக்களை கொச்சைப்படுத்தி வர்ணிக்கின்றன. சினிமாப்பாடல்கள் இதற்கு நல்ல உதாரணம் ஆகும். "கூரான உன் மார்பில்..." போன்று பல ஆயிரக்கணக்கான பாடல்கள் பெண்களின் மார்பு பற்றி எடுத்துக் கூறுகின்றது. இரட்டை அர்த்த வசனங்கள் என்பன இடம் பெறுகின்றன. மேலும் அண்மைக்காலச் சினிமாக்களில் பெண்களின் பொக்கிள் கூட ஒரு கவர்சசிப் பொருளாகி விட்டது. பொக்கிளில் முட்டை பொரித்தல், பொக்கிளில் பம்பரம் விடுதல்.... போன்று இன்னும் பல வகைகளில் காட்சிகள் அமைக்கப்பட்டு இருக்கின்றது. இவைகள் பெண்மையை அவமதிக்கும் விடயங்கள் ஆகும். தமிழ் சினிமாக்களின் இவ் சின்னத்தனமான செயல்களுக்கு யார் முற்றுப்புள்ளி வைப்பார்கள்?

அடுத்து பாலியல் வல்லுறவு என்பது மிகவும் கொடூரமான ஒரு செயல் ஆகும். மிருகங்களே அவை விரும்பிய உறவு கொள்ளுகின்றன. அதைப் போலவே மனிதனது உறவு முறையிலும் பாலியல் உறவு என்பது இரு உள்ளங்களின் அன்பின் அதி உயர் வெளிப்பாடு ஆகும். ஆனால் மிருகங்களை விட மோசமான முறையில் மனிதன் நடக்கின்றான். அதற்கு நல்ல உதாரணம் உலக நாடுகளில் இடம் பெறும் பாலியல் வல்லுறவு சம்பவங்கள். இலங்கை இதற்கு விதிவிலக்கல்ல. இலங்கை ஒரு கலாச்சார நாடு. ஆனால் இங்கு பாலியல் வல்லுறவுக் கலாச்சாரம் மேலோங்கி நிற்கிறது. இவற்றை நாம் அன்றாட செய்திகள் மூலம், தினசரிகள் மூலமும் அறிய முடிகின்றது.

பாலியல் வல்லுறவுக்குட்பட்ட பெண்கள் பலர் தற்கொலை செய்து கொள்கிறார்கள் என அண்மைக்கால ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள் உதாரணமாக மொனராகலை மாவட்டத்தில் 15 வயதுச்சிறுமியை தந்தை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியமையால் அவள் தன்னை தானே தீமூட்டிப் பரிதாபமாக இறந்த சம்பவம் அனைவரது நெஞ்சத்தையும் உருக வைத்தது. மேலும் ஆடைத் தொழிற்சாலையில் வேலை செய்யும் பல பெண்கள் காம வெறியர்களின் கழுகுப் பார்வையில் இருந்து தப்ப முடிவதில்லை. இவர்கள் வேலை விட்டு வரும் போது அவர்களைக் கடத்தி பாலியல் வல்லுறவுக்குட்படுத்துவது சாதாரண விடயம் ஆக அப்பகுதியில் காணப்படுகின்றது. பெரும்பாலான ஆடைத்தொழிற்சாலைப் பெண்கள் ஆட்டோ சாரதிகளாலேயே பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர். ஆனால் எமது சமூகக் கண்ணோட்டத்தில், பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டவர் மேலே பழி சுமத்துவதில் காணப்படும் அக்கறை அதனை செய்தவனை தண்டிப்பதில் இல்லை. ஏன் எனில் எமது சமூகம் அந்தப் பெண் அந்த நேரம் ஏன் அங்கு போனாள்? அவள் எப்படி உடை அணிந்திருந்தாள், ஏன் தனியே போனாள் என ஆய்வு செய்வார்களே தவிர அப்படி நடந்தவன் யார்? அவனுக்கு என்ன தண்டணை வழங்க வேண்டும் என சிந்திக்க தவறுகின்றனர். இவைகள் கூட இச் சமூகத்தில் உள்ள ஆணாதிக்க வெளிப்பாட்டையையே எடுத்துக் காட்டுகின்றது.

இலங்கையில் தற்கொலை கூடுதல் ஆக நடைபெறும் மாவட்டமாக மொனராகலை மாவட்டமே காணப்படுகின்றது. ஆய்வுகளின் படி இவர்களது மரணத்துக்குக் காரணம் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டமையே என்று கூறுகின்றனர். இது ஒரு புறம் நடக்க போர்க்கால சூழலைப் பயன்படுத்தி எமது அரச துருப்புக்கள் ஒரு பக்கம் பாலியல் வன்முறைகளில் ஈடுபடுவதனைக் காணமுடிகிறது.

அதாவது அரசபடைகளின் பாலியல் வல்லுறவுகள் அன்று தொட்டு இன்றுவரை நடந்து வருகின்றன. உதாரணமாக 1971 ஏப்பிரல் 16ம் திகதி அழகுராணி மன்னம்பேரி கைது செய்யப்பட்டு சீருடையினரால் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தபப்ட்டு கொலை செய்யப்பட்டாள். இதன் பின்பு 87, 89 காலப்பகுதியிலும் பெருமளவு பெண்கள் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டனர். அண்மைக்காலத்தில் கிருசாந்தி, ராஜினி, கோணேஸ்வரி என்போர் இதற்கு பிறகும் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன. ஆனால் பல சம்பவங்கள் வெளிவருவதில்லை. மறைக்கப்படுகின்றன. ஒருவர் பாலியல் வல்லுறவின் போது கொல்லப்பட்டால் அல்லது பின்பு கொலை செய்யப்பட்டாலே அவர் பாலியல் வல்லுறவுக்குட்பட்டார் என்பது தெரிய வருகிறது.

இதன் மூலம் அறியக்
என்னவெனில் பாலியல்
வுக்குட்டபட்டவரின் இற
தான் உண்மைகள் வெ
ன்றன என்பதனை அன்ற
வுகளின் மூலம் அறிய
ன்றது. ஏன் இவ்வாறு
வல்லுறவுகள் இடம் பெ
என நோக்கினால் எமது
களில் உள்ள ஓட்டைக
இது மாத்திரம் அரசிய
வாக்கும் ஓர் காரணம்
அதாவது சில அரசியல்
துணை போவதினால் இ
வலுவாகின்றது. அதா
சியல் செல்வாக்கை
படுத்தி சட்டத்தின்
இருந்து இவர்கள் தப்பி
றார்கள். இவ்வாறு
வல்லுறவுகளில் ஈடுபடு
சரியான தண்டனை வழ
மாயின் ஏனையோர் இ
செயல்களைப் புரிவதற்
படுவார்கள். எனவே அர
ளுக்கு சரியான தண்டன
குவதன் மூலமே இதனை
புள்ளியிடலாம்.

இன்று பெண்களில் சில
சாரிகள் என்ற பட்டப்பெ
அழைக்கப்படுகின்றனர்
காரணகர்த்தாக்கள்
நோக்கும் போது, விபச
பற்றிய ஆய்வு நடத்தி
வாளர்கள் கூறுகின்
பெரும்பாலான பெண்கள்
ளினால் வஞ்சிக்கப்பட்
அடுத்து, குடும்பப் பொ
நிலையும், அரசியல் சூழ்
என்றே கூறுகின்றார்கள்
வாக பெண் என்பவள்
விரும்பி கெடுவதுமில்ல
ம்பி விபச்சாரத்தில் ஈடு
இல்லை என்றே கூறலா
கையிலும் புனித பூ
போற்றப்படும் அனுராதபு
விபச்சார நிலையம் அ
விட்டது. இங்கு இன்று
ளவில் விபச்சாரிகள்
படுவதாகவும் இதற்குக்
யாழ்ப்பாணத்தில் கடமை
இராணுவ வீரர்கள் விடு
காலத்தில் விடு செல்
போது அனுராதபுரத்தில்
கும் போது இவர்களை
செல்வதாகவும் இதன
தொழில் வெகு சிறப்
நடைபெறுகின்றது
அண்மைக்கால ஆ
கூறுகின்றன. இவ் விபச்ச
ஆய்வு செய்த போது, இ
பெரும்பாலான
ஆண்களினால் காதல்
போர்வையில் பாலியல்
வஞ்சிக்கப்பட்டு ஏமாற்
வர்களாகவும் காணப்
றனர். இதனால் அவர்க
றோர்கள், சமூகம் என்
ஒதுக்கப்பட்டமையால்
இத் தொழிலில் ஈடு
றார்கள். இச்சமூகம்,
ாகளும் இப்பெண்கனை
த்தில் இருந்து விலக்கி
ஏன் அந்த ஆண் மகன்
தில் இருந்து விலக்க
அவன் மீண்டும் ஆண்
ஆணவத்துடன் தப்புக்
தொடர்வான். ஒரு சில
குடும்ப சுமையை சுமப்ப
இத் தொழிலில் ஈடுபடு
பெண்ணொருத்தி இவ்
கையை நடத்தினால்
என்றும், வேசி என்றும் அ
ஆனால் ஆணை
அழைப்பது என்று கேள்
னில் அவர்களை ஆ
தான் சொல்லுவார்கள்
அவர்களின் ஆண்
வெளிப்பாடு என பெரு
பவர்கள் பணம்
ஆண்கள் பெண்களை
கும் போது, பெண்களுக்
ஏன் தண்டனை? ஆணுக்
தண்டனை வழங்கப்பட
அல்லவா?

அடுத்து இந்தியா, இ
போன்ற நாடுகளில்

(தொடர்ச்சி பக்கம் 11

www.padippakam.com



# ஆப்பு இழுத்த குரங்கின் நிலையில் இலங்கை அரசு

**யுத்தத்தை காரணம் காட்டி பல்வேறு ஜனநாயக போராட்டங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்த பொதுஜன முன்னணி அரசின் நயவஞ்சக தந்திரத்துக்கு. விடுதலைப் புலிகள் ஆப்பு வைத்துள்ளனர். விடுதலைப்புலிகளின் தொடர்ச்சியான யுத்த நிறுத்த அறிவிப்பு தென் இலங்கை மக்கள் மத்தியில் மிகப் பெரியதொரு மனமாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது.**

சமாதானக் கதவு திறந்து இருக்கிறது. விடுதலைப் புலிகள் பயங்கரவாதத்தில் நம்பிக்கை உடையவர்கள். சமாதானத்துக்கு ஒரு போதும் வர மாட்டார்கள் என்றெல்லாம் தாம் நினைத்த படி கதை அளந்து வந்தது இலங்கை அரசு. விடுதலைப்புலிகளின் தொடர்ச்சியான யுத்த நிறுத்த அறிவிப்பு வெளிவந்தவுடன் இலங்கை அரசு தர்மசங்கடத்துக்குள் மாட்டியுள்ளது. விடுதலைப் புலிகள் குறித்த கால வரைய்றைக்குள் யுத்த நிறுத்தத்தை மீறுவார்கள் என எதிர்பார்த்திருந்த அரசுக்கு விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்த நீடிப்பு பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்துள்ளது. விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்பு சர்வதேச சமூகம், தென் இலங்கையின் புத்தி ஜீவிகள், உழைக்கும் மக்கள், மட்டத்தில் பெரும் ஆதரவைப் பெற்றுள்ளது. எனவே இலங்கை அரசு புலிகள் பற்றிக் கூறிவந்த கதைகளுக்கு தற்போது முடிவு ஏற்பட்டுள்ளது. மலையக மக்களின் சம்பள உயர்வுக் கோரிக்கைப் போராட்டம், தென் இலங்கை முழுவதும் போராட்டத் தீயை பரவச் செய்யும் அபாயத்தை ஏற்படுத்தியது. இதைவிட காலியில் மக்கள் கிளர்ந்து எழுந்தமையால், ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்க வேண்டிய நிலை அரசுக்கு ஏற்பட்டது. ஏழை விவசாயிகளின் போராட்டங்களும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடந்து கொண்டு இருக்கிறது. பல்கலைக்கழக மாணவர் மத்தியிலும் அரசுக்கு எதிரான போராட்டம் முனைப்புப் பெற்று விளங்குகின்றது. வடக்கு கிழக்கில் பொங்கு தமிழ் எழுச்சியுடன் தொடங்கப்பட்ட போராட்டங்கள் இன்று வரை தொடரலையாக போய்க் கொண்டு இருக்கிறது.

யுத்தத்தை காரணம் காட்டி பல்வேறு ஜனநாயக போராட்டங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்த பொதுஜன முன்னணி அரசின் நயவஞ்சக தந்திரத்துக்கு, விடுதலைப் புலிகள் ஆப்பு வைத்துள்ளனர். விடுதலைப்புலிகளின் தொடர்ச்சியான யுத்த நிறுத்த அறிவிப்பு தென் இலங்கை மக்கள் மத்தியில் மிகப் பெரியதொரு மனமாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது. புலிகளை யுத்த நிறுத்தத்தை மீறச் செய்வதற்காக, பல்வேறு வழிகளில் அரசு சீண்டியது. விடுதலைப்புலிகள் எதற்கும் மசிந்து கொடாது, தமது யுத்த நிறுத்தத்தை, மிக நிதானமாகக் கடைப்பிடித்து வருகின்றனர். இது உள்ளூர் மட்டத்திலும் சர்வதேச அரங்கிலும், விடுதலைப் புலிகள் பற்றிய மதிப்பீட்டை மேலும், உயரச் செய்துள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஓயாமல் செயற்பட்டு வந்த வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் "அடங்காத காளை ஒன்று அடிமாடாய்ப் போனது போல" சுருண்டு படுத்து விட்டார். தற்போது கதிர்காமரின் கடமையை சந்திரிகா அவர்கள் செய்து வருகின்றார். இதன் முதற்கட்ட நடவடிக்கையாக ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயத்தை மேற்கொண்டார். இவரின் விஜயத்தின் முக்கிய நோக்கங்களாக வரவு செலவுத் திட்டத்தில் துண்டு விழும் தொகையை உதவிகள் மூலம் நிரப்புதல், பாதுகாப்பு உதவி, விடுதலைப் புலிகளை தடை செய்தல், ஆகிய அடங்குகின்றன. இதில் இவர் வெற்றி பெறுவார் என்பது சந்தேகமே. பொதுஜன முன்னணிக்குள் முரண்பாடுகள் மேலும், மேலும் விரிவடைந்து கொண்டே செல்கிறது.

ஆறுமுகம் தொண்டமான் பொதுஜன முன்னணியில் இருந்து வெளியேறப் போவதாக மிரட்டி வருகின்றார். மலையக மக்களின் பிரச்சினைகளே அமைச்சரை இந்த நிலைக்குக் கொண்டு வந்துள்ளது. பொதுஜன முன்னணியின் வெகுஜன ஆதரவு பெற்ற தலைவர்களும், விரக்தி அடைந்த நிலையிலேயே உள்ளனர். அவர்களின் குரல்கள் கூட இப்போது வெளிவருவது இல்லை. அந்த அளவுக்கு அவர்கள் ஒதுக்கப்பட்ட அல்லது ஒதுங்கிய நிலையில் உள்ளனர். பாரம்பரிய இடதுசாரி கட்சிகளான லங்கா சமசமாஜக் கட்சியும், கம்யூனிஸ் கட்சியும், தமது பங்கிற்கு அரசுக்கு எதிரான கண்டனங்களைத் தொடுத்து வருகின்றனர். யுத்த மேலாதிக்கவாதிகளும், இனவாதிகளுமே இன்று பொதுஜன முன்னணியைக் காப்பாற்றும் கைங்கரியத்தில் முழுமூச்சாக ஈடுபட்டு வருகின்றனர்.

வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு செலவினத்துக்காக அதிக நிதி ஒதுக்கப்பட்டதால், துண்டு விழும் தொகை அதிகரித்துக் காணப்படுகிறது. இதை ஈடு செய்வதற்காகவே சந்திரிகா இன்று ஐரோப்பிய நாடுகளுக்கு பிச்சைச் சுற்றுலாவை மேற்கொண்டுள்ளார்.

இன்று பொதுஜன முன்னணிக்கு இருக்கும் ஒரே ஒரு வழி நாட்டின் வளங்களை விற்பதே. இதற்கு உள்ளூர் மட்டத்தில் பலத்த எதிர்ப்புகள் ஏற்கனவே கிளம்பியிருக்கின்றன. இதனால் இந்த நடவடிக்கையும், அரசுக்கு சறுக்கலாக முடியப் போகிறது.


நாணய பெறுமதி இறக்கத்தினால் 30 வீதம் வரையில் உயர்ந்த விலைவாசியால், நாட்டின் உழைக்கும் மக்கள், மிகவும் விரக்தி அடைந்த நிலையில் உள்ளனர். தற்போது பாதுகாப்பு வரி உயர்த்தப்பட்டதாலும், பாதுகாப்புச் செலவினம் அதிகரித்ததாலும், ஏழை மக்களின் நிலை மேலும் சிக்கலாகப் போகிறது.

வருங்காலங்களில் தென் இலங்கை முழுவதும் போராட்ட அலைகளே தென்படப் போகிறது. விடுதலைப் புலிகள், தொடர்ந்தும் யுத்த நிறுத்த அறிவிப்பை மேற்கொண்டு வருவதால், யுத்த சாக்கு போக்கு மக்களிடம் செல்லாததாகி விடப் போகிறது.

ஏகாதிபத்தியவாதிகள், தொடர்ந்தும், சந்திரிக்காவைக் காப்பாற்ற நினைப்பதன் மர்மம், சந்திரிகா ஏகாதிபத்திய வாதிகளுக்கு உடன்பாடான பொருளாதார கொள்கைகளைக் கடைப்பிடிப்பதே. ஆனாலும் அரசியல் உறுதியற்ற நிலையில் சந்திரிகா இருப்பாராயின் ஏகாதிபத்தியவாதிகளால் ஒன்றும் செய்ய முடியாத நிலையே ஏற்படும். சர்வதேச சமூகத்தைத் திருப்தி செய்வத்றகாக தமிழ் மக்களுக்கு ஏதாவது ஒரு திர்வை வழங்க வேண்டிய நிர்ப்பந்தம், சந்திரிகாவுக்கு உண்டு. இன்று உள்ள சூழ்நிலையில் தமிழ் மக்களுக்கு வழங்குவதற்கு ஒரு நகல் திட்டம் கூட சந்திரிகா கைகளில் இல்லை. பலம் பெற்று வரும் பௌத்த சிங்கள பேரினவாதிகளை எதிர்த்துக் கொண்டு புதிய தீர்வுத் திட்டத்தை சந்திரிகா கொண்டு வருவாரா என்பது புதிராகவே உள்ளது.

நாடு குழப்பம் அடைந்த நிலையில் காணப்படுகிறது. ஐக்கிய தேசியக் கட்சி தலைமை தாங்கும் தகுதியை இழந்த நிலையில் காணப்படுகிறது. ஜனதா விமுக்தி பெரமுனை தேர்தல் மயக்கத்தில் இருந்து இன்று வரை மாறுபடாத நிலையிலேயே உள்ளது. எனவே புதிய தலைமைகள் நாட்டு மக்களுக்கு தலைமை தாங்கும் சூழ்நிலை உருவாகி வருகிறது. இத்தகைய புதிய தலைமைகள் வடக்கு, கிழக்கு மலையக மக்களின் கோரிக்கைகளை இணைத்துப் போராட வேண்டும். 1953ம் ஆண்டு நடைபெற்ற கர்த்தால் போன்றதொரு நடவடிக்கைக்கு இடம் இருககிறது.

எனவே முற்போக்கு சக்திகளை ஒன்று இணைக்கும் முயற்சி அவசரம், அவசரமாக செய்யப்பட வேண்டும்.



## கலாநிதி விக்ரமபாகு கருணாரத்ன 5.3.2001

## விடுதலைப் புலிகளைத் தடை செய்யும் படி பிரித்தானிய பாராளுமன்றத்தைக் கோரும் தீர்மானத்தை எதிர்த்து மேல் மாகாண சபையில் ஆற்றிய உரை

*கௌரவ பிரதித் தலைவர் அவர்களே! இவ்வருந்தத்தக்கத் தீர்மானத்தை எதிர்ப்பவனான நான் சில வார்த்தைகள் பேசுவதில் மகிழ்ச்சியடைகிறேன். தமிழ் மக்கள் தமக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு எதிராக நடத்தும் போராட்டத்தின் இறுதியான குணாம்சங்களையே விடுதலைப்புலிகள் காட்டுகின்றனர். 1956ம் ஆண்டு முதலே தமிழ் மக்களுக்கு உரிமைகள் வழங்கப்படும் முயற்சிகளுக்கு எதிராக சம உரிமை. சுயஆட்சி என்பவற்றைத் தடுத்து. இன வெறியர்கள். கலகம் விளைவித்தனர். அழிவுகளைச் செய்தனர். அச்சீர்திருத்தத்தை முன் வைத்தவர்கள் கொலை செய்யப்பட்டனர்.*

*பண்டார நாயக்க இச்சீர்திருத்தங்களை முன் வைத்தபோது அவருக்கு என்ன நடந்தது என்பது எமக்குத் தெரியும். J. R. அச்சீர்திருத்தங்களை முன் வைத்தபோது ஏற்படுத்திய நாசங்களும். எமக்குத் தெரியும். 83ம் ஆண்டுக் கலவரம் ஏற்படுத்திய அழிவு பற்றியும் எமக்குத் தெரியும். கொடுமையான அடக்குமுறையில் இதை முடிவுக்குக் கொண்டு வரலாம் என்ற முட்டாள் தனமான கருத்துக்களினாலேயே இவை அனைத்தும் நடந்தேறின. இந்த பயங்கரவாத மசோதாவிற்கு எதிராக 1979ம் ஆண்டு எதிர்த்தவன் என்ற ரீதியில் பிரித்தானிய பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் இந்த மசோதாவை அந்த அளவிற்கு அல்லது அதை விட கடுமையாக எதிர்ப்பேன். பிரித்தானிய பாராளுமன்றத்தை கோருவது. அம் முதலாளித்துவ பாசறைக்குச் சென்று அதன் தலைவர்களை இத்தகைய அடக்கு முறைச் சட்ட திட்டங்களை நிறைவேற்றக் கோருவதன் மூலம் எமது பிரச்சினைகளைத் தீர்க்கலாம் என்றெண்ணுவதும். இதன் மூலம் எமது நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த எண்ணுவது முட்டாள்தனமாகும். இந்த குரோதத்தையும். வெறுப்பையும் உண்மையிலேயே நாம் நீக்க வேண்டுமானால் தமிழர்களின் சுயவாட்சிக் கருத்தையும். உரிமைகளையும் முன்வைக்கும் அரசியல் யாப்பை முன் வைக்க வேண்டும். நாம் அந்நோக்கங்களை காத்து நின்றோம். ஐக்கிய சோசலிச முன்னணியில் இந்த நோக்கங்களுக்காக நாங்கள் போராடியபின் பல உயிர்களைத் தியாகம் செய்தோம். பல தலைவர்களை. தியாகம் செய்தோம். இக் காட்டு மிராண்டித்தனமான அடக்குமுறைகளை சர்வதேச மட்டத்திற்குக் கொண்டு வரவேண்டுமென குரலெழுப்புவதைக் கண்டு நான் வருந்துகிறேன். இவர்கள் யுத்த வெறியர்களினதும். இராணுவ நடவடிக்கையாளர்களினதும் முகவர்களாகச் செயல்படுத்துகின்றனர். இவற்றின் மூலம் இந்த நாட்டிற்கு ஒரு போதும் சமாதானத்தை கொண்டும் வர முடியாது.*

*1994 ம் ஆண்டு இந்த அரசாங்கம் பதவிக்கு வந்த பொழுது தமிழ் மக்கள் ஊர்வலம் நடத்தினர். "நீதிக்கு நேரம் வந்துள்ளது" "ஏதோ தீர்வு முன் வைக்கப்படும்" எனக் கோஷித்தனர். ஒருவருடத்தின் பின். 1995ம் ஆண்டு "சுயவாட்சிக்கான தீர்வுகள் இதோ இருக்கின்றன என சந்திரிக்கா கூறினார். எவ்வாறானாலும் அத்தீர்வுகள் மீது தமிழர்களோடு பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்க இந்தத் தலைமை தவறி விட்டது. அதன் பொருட்டு அவர்கள் என்ன செய்தனர். யூ என். பியுடனும் இன வெறி அமைப்புகளுடனும் பேசியே காலத்தை வீணடித்து ஒரு அரசியல் யாப்புப் பிரேரணையை முன் வைத்தனர். இந்தச் சபையிலே முன்னைய முதலமைச்சர். இந்தப் பிரேரணைகள். 13வது திருத்தத்தை விட ஒரங்குலம் தானும் கூடுதலாகத் தரவில்லை எனக் கூறினார்.*

*நீங்கள் யாரைக் குறை கூறுகிறீர்கள்? இவ் வெறுப்புக்கு யார் காரணம்? ஜே. ஆர் ஜயவர்த்தனவின் 13 வது திருத்தத்தை விட ஒரங்குலம் தானும் முன்னே செல்வதாக இல்லை. எவரோடு உங்களால் இணக்கத்திற்கு வரமுடியும். அந்த வழியிலே மக்களைத் திருப்திப்படுத்தி இப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வர முடியுமா? அதற்கான வழியில்லை.*

(தொடர்ச்சி பக்கம் 11இல்........).

படிப்பகம்

www.padippakam.com



# இலங்கை அரசும் இனவாதிகளும் கொக்கரிக்கும் அளவிற்கு பிரித்தானிய தடை பாதிப்பை ஏற்படுத்தாது

பிரித்தானிய பாராளுமன்றம், தமிழ் ஈழ விடுதலைப் புலிகளைத் தடை செய்துள்ளது. இதனுடன் மேலும் 20 அமைப்புக்களையும் தடை செய்திருக்கிறது. இவ்வாறு தடை செய்யப்பட்ட அமைப்புக்களாவன:

1. கமாஸ் - பாலஸ்தீனம்
2. பாலஸ்தீனியன்.- இஸ்லாமிய ஜிகாத் - பாலஸ்தீனம்
3. அபுநிடால் அமைப்பு - பாலஸ்தீனம்
4. கரகாட்டு சாருதீன் - பாக்கிஸ்தான்
5. ஜய்ஸ் ஈ முகமட் - பாக்கிஸ்தான்
6. லக்ஸர் இ தொய்மா - பாக்கிஸ்தான
7. இஸ்லாமிய ஜிகாத் - எகிப்து
8. அல் கமாஸ் அல் இஸ்லாமியா - எகிப்து
9. அகமட் இஸ்லாமியா குழு - அல்ஜீரியா
10. சலாபிஸ்ட் குழு - கோல்போ கொம்பற் - அல்ஜீரியா
11. பப்பார் சல்கா - இந்தியா
12. சர்வதேச இளைஞர் அமைப்பு - இந்தியா
13. குர்திஸ்தான் தொழிலாளர் கட்சி - துருக்கி
14. புரட்சிகர மக்கள் விடுதலை முன்னணி - துருக்கி
15. தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் - இலங்கை
16. ஹிஸ்புல்லா வெளிப்புற பாதுகாப்பு இயக்கம் - லெபனான்
17. அல்ஜடா (ஏசாமா பின்லேடன் தலைமையிலான குழு - சவூதி அரேபியா
18. இஸ்லாமிய இராணுவம் கடன் - யேமன்
19. முஜாகுதீன் இசல்க் - ஈரான்
20. கியுள்கடிரா அஸ்காருகானா - ஸ்பெயின்
21. 17 நவம்பர் புரட்சிகர இயக்கம் - கிறீஸ்

நாடு முழுவதும் இன்று பிரித்தானிய அரசுக்கு நன்றி தெரிவிக்கும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. ஜனதா விமுக்தி பெரமுனை கூட பிரிட்டனின் தடைக்கு மனப்பூர்வ ஆதரவைத் தெரிவித்துள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் தடை செய்யப்பட்டமைக்குப் பெருமகிழ்ச்சி தெரிவித்து பத்திரிகையில் அறிக்கையும் விட்டுள்ளது. சிங்கள உருமையா அமைப்பும் பிரிட்டனின் நடவடிக்கையை ஆதரித்து மகிழ்ச்சி பிதட்டலில் திரிகிறது.

தடை செய்யப்பட்ட அமைப்புக்களில் 70 வீதமானவை மத்திய கிழக்கு நாடுகளைச் சேர்ந்த அமைப்புக்களாகும்.

எண்ணெய் வளம் பொதிந்த மத்திய தரைக் கடல் நாடுகளைச் சார்ந்த இந்த அமைப்புக்களைத் திடீரென பிரித்தானிய அரசு ஏன் தடை செய்தது? அத்துடன் புஸ் அமெரிக்க ஜனாதிபதியான கையுடன் பிரிட்டன் ஏன் தடை செய்யும் நடவடிக்கையை மேற்கொண்டது. இதற்குரிய விடையை மண்டையில் ஏதாவது இருந்தால் உணர்ந்து கொள்ள முடியும்.

மத்திய தரைக் கடல் நாடுகளில் உள்ள போராளி அமைப்புக்களுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே உறவு ஏற்படக் கூடாது என்பதே ஏகாதிபத்தியவாதிகளின் குறியாக உள்ளது. இதை பலமுறை அவர்கள் வெளிப்படையாக தெரிவித்தும் உள்ளனர். அதற்கு முக்கிய காரணம் ஏகாதிபத்தியவாதிகளின் உலகமயமாக்கல் நடவடிக்கைகளுக்கு, மத்திய தரைக் கடல் பகுதியை சார்ந்த விடுதலை இயக்கங்கள் தடையாக இருப்பதாலும், இவ் அமைப்புக்களுக்கு தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் தொழில் நுட்ப அறிவு போய்ச் சேர்ந்து விடுமா என்ற பயமுமே தடை செய்யத் தூண்டியது எனலாம்.

அவசர அவசரமாக தடைப் பட்டியல் தயாரிக்கப்பட்டமைக்கு, அமெரிக்க ஜனாதிபதியாக புஸ் வெற்றி பெற்றதே காரணம் என்று கூறமுடியும்.

புஸ்சின் வெற்றியோடு, அமெரிக்க எண்ணெய்க் கம்பெனிகள் உசாரடைந்துள்ளன. இக்கம்பனிகள் சூழல் மாசடைவதைக் கூட பொருட்படுத்தாது, தமது வர்த்தக நடவடிக்கையை விஸ்தரிப்பதில் நாட்டம் செலுத்துகின்றன. இதற்காகவே இக்கம்பனிகள் புஸ்ஸை ஆதரித்தன என்றும் கூறலாம். புஸ் வெற்றி பெற்றவுடன் செய்த முதல் நடவடிக்கை பிரித்தானிய பிரதமர் ரொனி பிளேயருடன் இணைந்து ஈராக்கைத் தாக்கியதாகும். இத்தாக்குதலின் மூலம் மத்திய கிழக்கில் உள்ள எண்ணெய் வளங்கள் மீது தமது ஆதிக்கத்தை வலுப்படுத்துவதே இவர்களின் குறியாக உள்ளது. இதேவேளை ஈராக்கின் வான்பரப்பு பாதுகாப்பிற்கு, ராடர் நிலையம் ஒன்றை கட்டுவதற்கு சீனா உதவுகின்றது என்ற அமெரிக்காவின் கூற்றினால் மத்தியதரைக் கடல் நாடுகளில் அச்சநிலை தோன்றியுள்ளது. இச்சூழ்நிலையில் அமெரிக்காவின் கைபொம்மைகளாக இருந்த சவூதி அரேபியா, குவைத் போன்ற நாடுகள் கூட தமது தளங்களை அமெரிக்கா பாவிப்பதையிட்டு கவலை கொண்டுள்ளமையை வெளிப்படுத்தியுள்ளன. இந்த அளவிற்கு அமெரிக்க பிரித்தானிய எதிர்ப்புணர்வுகள் மத்திய தரைக் கடல் பகுதிகளில் வியாபித்து வருகின்றது.

ஈராக் மீது தாக்குதல் நடத்திய கையோடு புஸ் பிரித்தானியாவுக்கு விஜயம் செய்ததன் முக்கிய நோக்கம், நேட்டோ நாடுகளிடையே ஏற்பட்டு வந்த விரிசலைத் தடுப்பதற்காகவே ஆகும். நாம் ஒற்றுமையாக உள்ளோம் என்பதை வெளிப்படுத்தவே இணைந்து தாக்குதலை நடத்தியுள்ளனர்.

புஸ்சின் பிரித்தானிய விஜயத்தின் கையோடு தடை பட்டியல் விடயம் வெளி வந்துள்ளது. ஐரோப்பாவில் உள்ள ஏனைய நாடுகளும் இதைப் பின்பற்றும் என்றே பிரிட்டன் கருதுகின்றது.

பிரித்தானிய நாட்டு மக்களின் உணர்வலைகள் இந்தத் தடை சம்பந்தமாக எப்படி இருக்கிறது என்பதை மகிழ்ச்சிக்கடலில் மிதப்பவர்கள் புரிந்து கொள்வது சாலவும் நல்லதாகும். பிரித்தானியாவின் தொழிலாளர் அமைப்புக்களும், மனித உரிமை அமைப்புக்களும், மற்றும் கத்தோலிக்க தேவாலயங்களின் குருமார்களும், தமது அதிருப்தியை வெளிப்படுத்தி உள்ளனர். பிரித்தானிய தாராளமய கட்சியின் உள்நாட்டுப் பேச்சாளரான சைமன் ஹியூ இச்சட்டம் ஜனநாயகத்திற்கு மாறாக சிறுபான்மையினரின் உரிமைகளை, நசுக்கும் நாடுகளுக்கு உதவக் கூடியதாக இருக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும் எனக் கூறியுள்ளார். அது சம்பந்தமாக நாம் மிகக் கவனத்துடன் செயற்பட வேண்டும் எனக் கூறியுள்ளார். கெபேட் அமைப்பின் பணிப்பாளரான ஜலியன் பினோவ்ஸ்கி தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்திற்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில், தடை பற்றிய தமது அதிருப்தியை தெரிவித்துள்ளதோடு, இத்தகைய அர்த்தமற்ற தடைகளை கடந்த காலம் முதல் ஐக்கியராச்சியம் செய்துள்ளது என்றும், இதை தடையாக பொருட்படுத்தாமல், சமாதான நடவடிக்கையை மேற்கொள்ளுங்கள் என்று கூறியுள்ளார்.

நாட்டின் தலைவியார், பிச்சை பாத்திரத்துடன் உலகம் முழுவதும் சுற்றுகின்றார். பொதுஜன முன்னணியினர் காதில் பூ வைக்கும் அம்மையார் சர்வதேச சமூகத்தின் காதில் பூ வைக்க முடியாது. தமிழ் ஈழ விடுதலைப் புலிகளை தடை செய்துள்ளமையால், பந்து இப்போது அம்மையாரின் கைக்கு வந்துள்ளது. தீர்வை வழங்கி பந்தை ஓங்கி அடிப்பாரா அல்லது உள்நாட்டு பிரச்சினை தாங்க முடியாது பிரான்சுக்கு ஓடுவாரா? வருங்காலம் பதில் சொல்லும்

இலங்கையின் உயர் ஸ்தானிகரான மங்கள முனசிங்கா பி. பி. சிக்கு அளித்த பேட்டியில், தமிழ் ஈழ விடுதலைப் புலிகளை தடை செய்திருந்தாலும், அச்சட்டத்தை மீறாத முறையில் அவர்களால் பிரித்தானியாவில் செயல்பட முடியும் எனக் கூறியுள்ளார். இதை தடை பற்றிய மகிழ்ச்சி போதையில் இருப்போர் விளங்கிக் கொள்ள வேண்டும். அத்துடன் பிரித்தானிய உள்நாட்டு அலுவல்கள் பிரதி அமைச்சர், சாள்ஸ் கிளாக் கருத்துத் தெரிவிக்கையில், தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் பயங்கரவாத நடவடிக்கையின் காரணமாக தடை செய்தோமே அன்றி அவர்களின் தனிநாட்டுக் கோரிக்கைக்கு எதிராக அல்ல. இத்தடை பற்றி தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் கருத்துத் தெரிவிக்கையில், நீண்ட காலமாக தமிழர்கள் மீது, மேற்கொண்டுள்ள அடக்கு முறைகள், மனித சங்காரத்தை பிரித்தானிய அரசு கவனத்தில் எடுக்கவில்லை எனக் கூறியுள்ளார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினரின் கருத்தின்படி, சர்வதேச ரீதியில் தடை செய்யப்படுகிறது, அதேவேளை இலங்கை அரசு தனது தாக்குதல் நடவடிக்கையை தீவிரப்படுத்தியுள்ளது. தமிழர்களின் வேதனை, துன்பங்கள் பற்றி சர்வதேச சமூகம் என்ன நினைக்கிறது என கேள்வி எழுப்பியுள்ளார். ஐக்கிய இராச்சியம் அயர்லாந்து குடியரசு இராணுவத்தைத் தடை செய்தாலும், அது அரசோடு பேச்சுவார்த்தை செய்தே வந்தது. அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் உறுப்பினர் அப்பாப்பிள்ளை வினாயகமூர்த்தி இத்தடை இலங்கையில் விடுதலைப்புலிகள் செயல்படுவதைப் பாதிக்காது. முழு உலகமும் இதைச் சொன்னாலும், விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் மனதிற்குள் நிலைத்து நிற்கிறார்கள் என்றும், இந்த ஏகாதிபத்திய வாதிகள் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்டு வரும், அரச பயங்கரவாதம் பற்றி ஏன் மௌனம் சாதிக்கிறார்கள்.

ஜனதா விமுக்தி பெரமுனை இத் தடை பற்றி மகிழ்ச்சி அடைந் துள்ளது. இதேவேளை ஜனத விமுக்தி பெரமுனை அங்க வகிக்கும் அகிலத்தில் அங்க வகிக்கும் துருக்கியைச் சேர்ந் அமைப்பும் தடை செய்யப்பட் டுள்ளது. இது பற்றி ஜனத விமுக்தி பெரமுனை வாய் திறக் கவில்லை. இதில் இருந்து ஜனத விமுக்தி பெரமுனையின் சுயரூப அம்பலத்துக்கு வந்துள்ளது.

எனவே தமிழ் ஈழ விடுதலை புலிகளின் தடையால் மகிழ்ச் சியில் திளைத்திருக்கும் அரசி யல் தூசுகள் உண்மை நிலை அறிந்து செயற்படட்டும். நாட்டி தலைவியார், பிச்சை பாத்திரத் துடன் உலகம் முழுவதும் சுற்று கின்றார். பொதுஜன முன்ன ணியினர் காதில் பூ வைக்கு அம்மையார் சர்வதேச சமூக த்தின் காதில் பூ வைக்க முடியாது. தமிழ் ஈழ விடுதலை புலிகளை தடை செய்துள்ளமை யால், பந்து இப்போது அம்மை யாரின் கைக்கு வந்துள்ளது தீர்வை வழங்கி பந்தை ஓங்க அடிப்பாரா அல்லது உள்நாட் பிரச்சினை தாங்க முடியாது பிரான்சுக்கு ஓடுவாரா? வருங் காலம் பதில் சொல்லும்

ரணத் குமாரசிங்க

தமிழில் அ. எஸ். மணியப்

# நொந்து போனவர்களை நோகடிக்கும் இலங்கை அரசு

கடந்த 53 வருட காலமாக தமிழ் மக்களின் சகல பிரிவினரும், பேரினவாத அரச செயற்பாட்டால் வஞ்சிக்கப்பட்டவர்கள் என்றே சொல்ல வேண்டும். அதற்கு சாட்சியே அகிம்சை போராட்டம் தற்கொலைப் போராட்டமாக பரிணாமம் அடைந்தமை.

அரசின் நடவடிக்கை இன்று கட்புலனற்றவர்களையும் பதம் பார்க்கின்றது. கட்புலனற்றவர்களின் பாடசாலை இலங்கையின் பல பாகங்களிலும் உள்ளது. பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த கட்புலனற்றவர்களுக்காக தென் இலங்கையில் 7 பாடசாலைகள் இயங்கி வருகின்றன.

வடக்கு கிழக்கில் கட்புலனற்றவர்களுக்காக ஒரே ஒரு பாடசாலை மட்டும் கைதடியில் இயங்கி வந்தது. இப்பாடசாலை யுத்தம் காரணமாக இன்று மூடப்பட்டுள்ளது.

எனவே இன்று வடக்கு கிழக்கு பகுதிகளில் வாழும் கட்புலனற்றவர்களுக்கு, எந்த வித மாற்று ஏற்பாடும் செய்யப்படாத நிலையில் அவர்களின் வாழ்வு சூனியமாக்கப்பட்டுள்ளது. புலிகளைத் தடை செய்ய சூறாவளி பிரசாரம் செய்தவரும், பௌத்தர்களுக்கு விடுமுறை வழங்குமாறும் ஐக்கிய நாடுகள் சபையில் இருந்து கேட்டவருமான லக்ஸ்மன் கதிர்காமர் இதற்கு என்ன சமாதானம் சொல்வாரோ தெரியாது.

தற்போது கிழக்கு மாகாணத்தில் மாந்தீவில் இயங்கி வந்த தொழுநோய் வைத்தியசாலைக்கும் மூடுவிழா நடக்கப் போகிறது. இதற்கான உத்தரவை சுகாதார அமைச்சின் தலைமைப்பனிமனை அனுப்பியுள்ளது. இவ் வைத்தியசாலைக் கட்டிடம் இராணுவ தேவைக்குப் பயன்படுத்தப்படலாம் என்று பேசப்படுகிறது. பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த தொழு நோயாளர்களுக்கு வேறு பகுதிகளுக்கு சென்று மருத்துவம் செய்ய வாய்ப்பு உண்டு. அதாவது தொழுநோய் பிரிவு உள்ள மருத்துவ மனைகள் தென் இலங்கையில் உள்ளன. தமிழ், முஸ்லிம் தொழிலாளர்களே திண்டாடப் போகின்றார்கள்.

புராண கதைகளில் கூட பெண்கள், சிறுவர், நோயாளர், வயோதிபர் என்பவர்களுக்கு பல சலுகைகள் உண்டு. பௌத்த நாட்டில் தமிழ் மக்கள் ஆயின் எவருக்கும் மன்னிப்பும் இல்லை, மன இரக்கமும் இல்லை.

ஆசிரியர்களுக்கான விசேட பயிற்சிக்கு பாடசாலை வேண்டும். பெரும்பான்மை இனத்தவர்களுக்கு மகரகமையில் பயிற்சி வழங்கும் பாடசாலை உண்டு. தமிழ் ஆசிரியர்களுக்கு விசேட பயிற்சி வழங்க எந்த ஒரு பாடசாலையும் இல்லை. இதன் அர்த்தம் என்ன? தமிழ் மாணவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு விசேட பயிற்சி வழங்கினால் அவர்கள் புலிகளாக மாறிவிடுவார்கள் என்ற நிலைப்பாடா?

சிறையில் இருக்கும் தனது மகனைப் பார்க்கச் சென்ற இளம் தமிழ் தாயைப் பயங்கர குற்றவாளி ஒருவர் தனது காமப் பசிக்கு இரையாக்க துணிந்துள்ளான். இந்தப் பயங்கரக் கேடியை சிறைச்சாலை அத்தியட்சகரே தீனி போட்டு வளர்த்து வருகிறார் என்ற சங்கதியும் தெரிய வந்துள்ளது. சிறைச்சாலை அத்தியட்சகர் பகுதிக்குள்ளேயே இப்பெண்ணை இழுத்துச் சென்று தனது இச்சையை தீர்க்க முனைந்துள்ளான் காமுகன்.

மன்னிக்க முடியாத அநியாயம் நிகழ்ந்துள்ளமையால், இதற்கு பொறுப்பாக இருக்கும் நீதி அமைச்சர் பட்டி வீரக்கோன் தனது அமைச்சர் பதவியை இராஜினாமா செய்வாரா?

படிப்பகம்



# வந்து பாருங்கள்

-அமுதா-

அந்த அரச சார்பற்ற நிறுவனத்தில் ன்று வழமைபோல் பணிகள் நடைற்றுக் கொண்டிருந்தன. நிறுவனத்தின் ரிப்பாளர் ஜெகதீசன் தனது இருக்கயில் இருந்து கொண்டு அன்றைய ப்திப் பத்திரிகைகள் பார்த்துக் கொண்ந்தார். இது தினமும் வேலை தொடங்க ர் அவர் செய்யும் முதற் பணியாக ந்தது.

ஜெகதீசனின் உதவியாளரான மாலினி கதீசனிடம் அன்று ஒப்படைக்க வேண் ஆவணங்களை ஒழுங்குபடுத்திக் ாண்டிருந்தாள். இவ்வேளையில் ாலைபேசி மணி அடித்தது. தொலைசியை எடுத்த மாலினி ஐயா உங்களுக்கு வுஸ்திரேலியாவில் இருந்து திரு. ாலிங்கம் அழைப்பெடுத்துள்ளார் றாள். ஜெகதீசன் தனது கையில் இரு பத்திரிகையை மேசையில் வத்துவிட்டு அழைப்பை எனக்குப் போடு று உத்தரவிட்டார். மிகவும் பரபரப்புடன் ாலைபேசியை எடுத்த ஜெகதீசன் "அட ாலிங்கமே கதைக்கிறாய், எப்படி மாய் இருக்கிறியளோ என்று ிக்கொண்டு மிகப்பலமாகச் சிரித்தார். ர்பு நான் உனக்கு என்ன செய்ய வேண்டும் று கேட்டார். என்ன நீ இலங்கை வரப் ாகிறாயா? யாழ்ப்பாணத்திற்கும் போகப் ாகிறாயா என ஆச்சரியமாகக் கேட்டார். மிழ் ஈழ விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தம் அறிவித்தவுடன் தான் உங்களுக்கு ங்கட ஞாபகம் வந்திருக்கு என நளிமாக ஜெகதீசன் உரையாடினானர். தாலைபேசி உரையாடலின் இறுதியில் ாலிங்கம் தனது குடும்பத்துடன் யாழ்ப்ணத்தில் இருக்கும் தனது தாயைப் ர்ப்பதற்கு இலங்கை வருகின்றார் என்தை ஜெகதீசன் உணர்ந்து கொண்டார்.

மகாலிங்கம் யாழ்ப்பாணம் போவதற்ன அனுமதிக்கு அவுஸ்திரேலியாவில் நக்கும் இலங்கைத் தூதரகத்தின் டாக பாதுகாப்பு அமைச்சுக்கு விண்ணப்த்திருந்தார். இதற்காக குறிப்பிட்டளவு ணம் செலுத்தி பற்றுச்சீட்டும் பெற்றிருந்ார். யாழ்ப்பாணம் போவதற்கான அனுமதிபக் கொழும்பில் போய் எடுக்கலாம் என்ற ம்பிக்கையில் இலங்கைக்கு வருவதற்கு யத்தமானார். இதற்கு முன்பாக பற்றுச்டு அனுமதி விண்ணப்ப பிரதி என்பற்றை தொலைமடல் ஊடாக ஜெகதீசக்கு அனுப்பி வைத்தார். யாழ்ப்பாணத்க்கு விமானப்பயணம் செய்வதில் உள்ள ழிவு சுழிவுகளை விளங்காத ஜெகதீசன் ன் எல்லா அலுவல்களையும் பார்க்கின். நீ எப்போது இலங்கைக்கு வரப்ாகிறாய் என்பதை மகாலிங்கத்திடம் ட்டார். எனக்கு ஒரு மாதம் லீவு கிடைத்ள்ளது. என்னும் ஒரு கிழமைக்குள் நான் லங்கை வருவேன். அதற்குள் நீ எல்லா லுவல்களையும் முடித்து வை என்று றிவிட்டு தொலைபேசி உரையாடலைத் ண்டித்து விட்டார்.

ஜெகதீசன் உடனடியாக செயலில் றங்கினார். மாலினியிடம் பாதுகாப்பு மைச்சுடன் தொடர்பு கொண்டு மகாலிங்த்தின் விண்ணப்பத்தின் நிலைபற்றி றியுமாறு சொன்னார். அதுமட்டுமல்மல் மகாலிங்கத்தின் அலுவலை த்திரம் கவனிக்குமாறு உத்தரவிட்டார். ன்று முழுவதும் பாதுகாப்பு அமைச்சுடன் நாடர்பு கொள்ள மாலினி எடுத்த முயற்சி னளிக்கவில்லை. வேறு என்ன வழிகளக் கையாளலாம் என அறிந்துவர ஜெகசன் வெளியே கிளம்பினார்.

ஜெகதீசன் தனக்குத் தெரிந்த பல ண்பர்களை யாழ்ப்பாணம் சென்றுவர ப்படி அனுமதி எடுக்கலாம் என்பதை சாரித்தார். எல்லா நண்பர்களும் ஒரே ழிமுறையையே அடித்துக் கூறினர். அதாவது அரசாங்கத்துடன் உறவாக இருக்கும் கட்சி ஒன்றின் பாராளுமன்ற உறுப்பினரின் ஊடாக விண்ணப்பித்தால் யாழ்ப்பாணம் செல்வதற்கான அனுமதியை உடனே பெற்றுவிடலாம் என்றனர். இதற்கிடையில் அடுத்த நாள் மாலை மூன்று மணிக்கு மாலினிக்கு பாதுகாப்பு அமைச்சின் தொடர்பு கிடைத்தது. தொலைபேசியில் பேசிய பாதுகாப்பு அமைச்சின் அதிகாரி மாலினியை நீ யார்? உனக்கும் விண்ணப்பகாரருக்கும் என்ன உறவு? என்பன போன்ற கேள்விகளை மிகக் கடுமையான தொனியில் கேட்டார். மாலினி உண்மை நிலையை மிகச்சுருக்கமாக சிங்களத்தில் எடுத்துக் கூறினாள். எல்லாவற்றையும் கேட்ட அந்த அதிகாரி இரண்டு நாள் கழித்து மீண்டும் தனக்கு தொலைபேசி எடுக்குமாறு கூறிவிட்டு தொடர்பைத் துண்டித்து விட்டார். மாலினி இரண்டு நாள் கழித்து மீண்டும் தொலைபேசியை எடுத்த போது தொடர்பு கிடைக்கவில்லை.

மேற்படி முறையில் சலித்துப்போன ஜெகதீசன் நண்பர்களின் ஆலோசனையின் பிரகாரம் அரசாங்கம் சார்பான பாராளுமன்ற உறுப்பினரின் உதவியை நாடியிருந்தார். அந்த பாராளுமன்ற உறுப்பினரும் விண்ணப்பத்துடன் சகல ஆவணங்களையும் அனுப்பி வைக்குமாறு ஜெகதீசன் அறிவுறுத்தினார். ஜெகதீசன் தனது நிறுவனத்தில் பணி புரியும் சுகுமாரனை இந்தப் பணியை நிறைவேற்றும்படி வேண்டிய ஆவணங்களைக் கொடுத்து அனுப்பி வைத்தார். இவை ஒருபுறமிருக்க மகாலிங்கம் தினமும் தொலைபேசியில் ஜெகதீசனிடம் அனுமதி கிடைத்து விட்டதா என நச்சரித்துக் கொண்டே இருந்தார். மாலினி பல நாட்களாக பல முறை பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்பு கொள்ள முயன்றும் தொடர்பு கிடைக்கவில்லை. சுகுமாரன் பாராளுமன்ற உறுப்பினரின் அலுவலகத்திற்கு காலையும், மாலையும் அலைந்து திரிந்தான். இலங்கையில் இனப்பிரச்சினை தீராத நோயாக, புரையோடிப் போன புண்ணாக இருப்பதைப் போன்று, ஜெகதீசனுக்கு மகாலிங்கத்தின் யாழ் போவதற்கான அனுமதி விடயமும் தீராத பிரச்சினையாக மாறிவிட்டது. அனுமதி விடயம் ஜெகதீசனுக்கு எட்டாத கனியாகவே இருந்தது.

யுத்தம் தொடங்கிய பின் தமிழ் சமுதாயத்தின் மீதான சுரண்டல்கள் வரையறையின்றி நடந்து கொண்டே இருந்தன. வெளிநாட்டில் இருந்து வரும் ஒருவர் யாழ்ப்பாணம் போக வேண்டுமாயின் விமான நிலையத்தில் இருந்து அவரது வீடு வரை பணத்தைக் கரைத்துக் கொண்டே இருக்க வேண்டும். தவறினால் அவர் வீடு போக முடியாது. திரும்பவும் தான் வாசம் செய்யும் நாட்டிற்கே செல்ல வேண்டும். நிவாரணம் பெறுவதில் இருந்து மருத்துவம் வரை பணமே சகலதையும் நிர்ணயிக்கும் காரணியாகியது. சிவில் நிர்வாகத்திற்கும் இராணுவ நிர்வாகத்திற்கும் இடையான வேறுபாட்டை இன்று யாழ் மக்கள் நன்கு புரிந்துள்ளனர்.

ஜெகதீசனின் காரியாலய வேலைகள் முடங்கிப் போய்க் கிடந்தது. மகாலிங்கத்தின் அனுமதி சம்பந்தமான விடயமே அங்கு சகல நடவடிக்கைகளையும் கட்டிப் போட்டிருந்தது. அன்றும் சுகுமாரனை அழைத்த ஜெகதீசன் என்ன நிலை என்று மிக மெதுவாகக் கேட்டார். வந்து பார்க்குமாறு கூறியிருக்கிறார்கள் என்றான் சுகுமாரன். இப்படி கடந்த பத்து நாட்களாக சொல்கிறார்கள் எப்பதான் சரி வருமாம் என்றார் ஜெகதீசன். நான் என்ன செய்ய ஐயா என்றான் சுகுமாரன். நீ ஏன் அதை உன்ர தலையில போடுறாய். நான் நாட்டு நடப்பைப் பற்றிக் கூறினேன் என்றார் ஜெகதீசன். பின்பு மாலினியிடம் ஏதாவது தகவல் கிடைத்ததா என்று கேட்டார். தொடர்பு கொள்ள முடியவில்லை என்றாள் மாலினி. இப்படியாக அன்றைய பொழுது முடிந்தது.

அடுத்தநாள் ஜெகதீசன் அலுவலகத்தில் இருந்த போது மகாலிங்கம் அங்கு வந்து சேர்ந்தார். நீ எப்போது வந்தனி என்று ஆச்சரியத்துடன் ஜெகதீசன் கேட்டார். நான் இன்று காலைதான் கொழும்பு வந்தேன் எனக் கூறிய மகாலிங்கம் என்னுடைய விடயம் எப்படி இருக்கிறது என்று கேட்டார். அது எல்லாம் சரி வரும். நீ பொலிசில் பதிந்து விட்டியா என்று கேட்டார் ஜெகதீசன். என்னுமில்லை. நாளைக்குப் பதியலாம் என்று மாமா கூறியதாக மகாலிங்கம் கூறினார். உன்ர மாமர் கதைய விட்டிட்டு உடனே போய்ப்பதி பதியாவிட்டால் அது உபத்திரமாக மாறிவிடும் என்று எச்சரித்தார் ஜெகதீசன். மகாலிங்கம் வந்து பத்து நாட்கள் ஆகிவிட்டன. யாழ்ப்பாணம் செல்வதற்கான அனுமதி மட்டும் கிடைக்கவில்லை. மாலினி பாதுகாப்பு அமைச்சுக்குத் தொலைபேசி எடுக்கும் முயற்சியினைக் கைவிட்டு விட்டாள். சுகுமாரனும் தான் அந்த பாராளுமன்ற உறுப்பினரின் அலுவலகத்திற்கு போக மாட்டான் என்று கூறி விட்டான். ஜெகதீசன் என்ன செய்யலாம் என கடுமையாக யோசிக்கத் தொடங்கினார். மகாலிங்கம் அன்று ஜெகதீசனிடம் தான் வீட்டிற்குப் போவதாகக் கூறிவிட்டுப் போய்விட்டார்.

மகாலிங்கத்தின் மனைவி வசந்தி மிகவும் கெட்டிக்காரி என்று கூறப்படுகிறவள். வசந்தி யாழ்ப்பாணம் கொண்டு செல்லும் பொருட்களை வாங்குவதற்காக ஓடித்திரிந்தாள். இதற்கென ஒரு முற்சக்கரவண்டியைத் தொடர்ந்து வாடகைக்குப் பிடித்திருந்தாள். அந்த முற்சக்கர வண்டிக்காரன் வசந்தியுடன் நன்கு சினேகிதமாகி விட்டான். வசந்தி தனது யாழ்ப்பாண அனுமதி விடயத்தை அவனிடம் கூறினாள். உடனே அந்த முற்சக்கர வண்டிக்காரன் இதற்கா இவ்வளவு கவலைப்படுகின்றீர்கள். எனக்கு ஏதாவது தருவியல் என்றால் நான் நாளைக்கே யாழ்ப்பாணம் செல்வதற்கான அனுமதி பெற்றுத்தருவேன் என்றான். அதற்கு வசந்தி நான் ஐயாவோடு கதைத்து விட்டு சொல்கிறேன் என்று கூறிவிட்டு வந்தாள். வீட்டுக்கு வந்த வசந்தி மகாலிங்கத்தின் கவலையான முகத்தைப் பார்த்துவிட்டு என்ன ஒரு மாதிரியாக இருக்கிறியள் என்றாள். இல்லை வசந்தி யாழ்ப்பாண அனுமதி இன்னும் கிடைக்கவில்லை என்றார் மகாலிங்கம். அத்துடன் ஜெகதீசன் என்னுடைய வேலையைக் கவனிப்பதற்கு ஓடித்திரிவதால் அவனுடைய வேலைகள் யாவும் போட்டபடி இருக்குது என்றார் கவலையுடன். இப்பவே பத்து நாட்கள் போய்விட்டன. வசந்தி எப்பதான் அனுமதி கிடைக்கப்போகுது எப்பதான் யாழ்ப்பாணம் போகப்போகிறேன் என்றார் பெருமூச்சுடன். இதுதான் நல்ல சமயம் என்றுணர்ந்த வசந்தி இஞ்சருங்கோ அந்த முற்சக்கரவண்டிக்காரன் வேறு இடத்தில் அனுமதி பெற்றுத்தருகிறானாம் தனக்குக் கொஞ்சப் பணம் தரட்டுமாம் என்கிறான். அப்படி எடுத்தால் என்ன என்றாள் வசந்தி. உனக்கு இங்கே வந்து கண்டகிண்ட குப்பைகளோட கதைக்கிறதுதான் வேலை போல கிடக்குது போய் உன்ர வேலையைப்பார் என எரிந்து விழுந்தார் மகாலிங்கம்.

அடுத்தநாள் காலை ஜெகதீசனிடம் சென்ற மகாலிங்கம் வசந்தி கூறிய விடயத்தை ஜெகதீசனுக்குக் கூறினார். அதற்கு ஜெகதீசன் மகா உனக்கு இன்னமும் இருபது நாட்கள் தான் உள்ளன. உண்மையான வழியில் அனுமதி எடுக்கலாம் என்ற நமபிக்கை எனக்கில்லை. எனவே வசந்தி சொன்ன வழியை நாடுவதே நல்லதாகத் தோன்றுகிறது என்றார். பலத்த யோசினையுடன் வீட்டுக்கு வந்த மகாலிங்கம் வாசலில் வரும் போதே வசந்தியைக் கூப்பிட்டார். வசந்தியும் என்ன என்றே கேட்டுக் கொண்டே ஓடி வந்தாள். யார் அந்த முற்சக்கர வண்டிகக்காரன்? அனுமதி பெற எவ்வளவு கேட்கிறான்? எனக் கேட்டார் மகாலிங்கம். அதற்கு வசந்தி நான் அவனைக் கூப்பிட்டு விடுகிறேன். நீங்களே கதையுங்கள் என்றாள். அங்கு நின்ற சின்னப்பையன் ஒருவனிடம் அந்த முற்சக்கரவண்டிக்காரனை கூட்டிக் கொண்டு வரும்படி வசந்தி கூறினாள்: சற்று நேரத்தில் அந்த முற்சக்கரவண்டிக்காரன் தனது வாகனத்துடன் வசந்தி வீட்டிற்கு வந்து சேர்ந்தான்.

முற்சக்கர வண்டிக்காரனை எதிர்பார்த்திருந்த மகாலிங்கம் அவனைக் கண்டவுடன் வசந்தி சொன்ன விஷயத்திற்கு எவ்வளவு பணம் கேட்கிறாய் என்றார். முற்சக்கரவண்டிக்காரனுக்கு முதலில் விடயம் விளங்கவில்லை. இடைநடுவேதான் யாழ்ப்பாண அனுமதி என்பது ஞாபகத்திற்கு வந்தது. ஐயா நான் இப்போது சம்பந்தப்பட்டவரைக் கூட்டி வருகிறேன். நீங்கள் அவருடன் கதையுங்கோ என்று கூறிவிட்டுச் சென்றான். பதினைந்து நிமிடத்துக்குள் முற்சக்கரவண்டிக்காரன் வேறு ஒரு நபருடன் வந்து சேர்ந்தான். பார்ப்பதற்கு மிகவும் மோசமான தோற்றமுடைய அந்த மனிதன் திடீரென பணக்காரன் ஆகியவன் போல் காணப்பட்டான். யுத்த நிலை காரணமாக இப்படி திடீர் யோகம் அடித்த பலர் இன்று தமிழ் சமுதாயத்தில் காணப்படுகின்றனர். முற்சக்கரவண்டிக்காரன் வசந்தி அம்மா என்று கூப்பிட்டான். சத்தம் கேட்டு எட்டிப்பார்த்த மகாலிங்கம் என்ன வேண்டுமென்று கேட்டார். நீங்கள் கேட்ட ஆள் இவர்தான் என்றான் முற்சக்கரவண்டிக்காரன். இவர்தானோ என ஏளனத்துடன் கேட்டார் மகாலிங்கம். விடயத்தைப் புரிந்த புதியவர் நாளை காலை யாழ்ப்பாணம் போக ஆயத்தமா என்று கேட்டான். இதைக் கேட்டவுடன் வீட்டில் இருந்த எல்லோரும் முற்றத்துக்கே வந்து விட்டனர். விடயத்தின் தாக்கத்தை உணர்ந்த மகாலிங்கம் வந்தவரை உள்ளே கூட்டிச் சென்று கதிரையில் அமர வைத்தார். நேரத்தை விரையமாக்க விரும்பாத அந்த புதிய மனிதர் தனது சேவைக்குரிய கட்டணங்களை கூறினார். மகாலிங்கமும் வசந்தியும் பலமுறை யோசித்துவிட்டு சம்மதம் கூறினர். சில ஆவணங்களைப் பெற்றுக் கொண்டு போன அந்த புதிய மனிதர் அடுத்த நாள் காலை மகாலிங்கம் குடும்பத்தினரை யாழ்ப்பாணம் அனுப்பி வைத்தார்.

உண்மை நிலை தெரியாத ஜெகதீசன் அடுத்த நாள் காலை அலுவலகத்தில் மாலினியிடம் ஒரு தரம் பாதுகாப்பு அமைச்சுக்கு தொலைபேசி எடுக்குமாறு சொன்னார். மாலினியும் எடுத்தாள். தொடர்பு கிடைத்தது. அதே கேள்வி அதே மறுமொழி. பாதுகாப்பு அமைச்சில் இருந்து கிடைத்தது. பின்பு ஜெகதீசன் சுகுமாரனை அந்தப் பாராளுமன்ற உறுப்பினரிடம் போய் வரும்படி மிகத் தாழ்மையாகக் கேட்டார். சுகுமாரனும் சென்றான். மீண்டும் திரம்பி வந்த சுகுமாரன் இன்று மாலை வந்து பார்க்கட்டாம். பெயர் வராவிட்டால் நாளை விடுமுறையாம். நாளை மறுநாள் வந்து பார்க்குமாறு சொன்னதாகச் சொன்னான். இப்ப ஒரு மாதமாக இதைத்தானே கூறினம் என்று கூறிவிட்டு சரி சரி நீங்கள் எல்லோரும் உங்கள் வேலைகளைப் பார்க்குமாறும் பணித்தார். சற்று நேரம் கழித்து மகாலிங்கம் வீட்டுக்கு தொலைபேசியை எடுத்தார். அப்போது மகாலிங்கம் யாழ்ப்பாணம் போன செய்தி அவருக்குக் கிடைத்தது. அதிர்ந்து போய் ஒரு முப்பது நிமிடம் வரை தனது இருக்கையில் இருந்தார் ஜெகதீசன்.

எமது நிலை இவ்வளவு மோசமாகி விட்டதா என தனக்குள் நொந்து கொண்டார் ஜெகதீசன். யாழ்ப்பாணத்தில் சிவில் நிர்வாகம் இருந்த காலத்தில் சின்ன விடயங்களுக்காக தான் நடத்திய போராடடங்களை எண்ணிப்பார்த்தார். இன்று நடந்திருக்கும் இந்த அநியாயத்திற்கு எதிராக தன்னால் ஒன்றும் செய்ய முடியவில்லையே என மிகவும் மனம் வருந்தினார்.

மகாலிங்கம் யாழ்ப்பாணத்தில் இருந்து திரும்பி வந்து அவுஸ்திரேலியாவுக்கும் சென்று விட்டார். மகாலிங்கம் சென்று ஒரு மாதத்தின் பின் தினக்குரல் பத்திரிகையில் மகாலிங்கத்தின் குடும்பத்தவர்களின் பெயர்ப்பட்டியல் வெளியாகி இருந்தது. ஜெகதீசன் மீண்டும் தினக்குரல் பத்திரிகையில் அவர்களின் பெயரைப் பார்த்து விட்டு அட்டகாசமாகச் சிரித்தார். அலுவலகத்தில் இருந்தோர் ஒன்றும் தெரியாமல் விழி பிதுங்கிய நிலையில் ஜெகதீசனைப் பார்த்தனர்.

முற்றும்.

(யாவும் கற்பனை)

www.padippakam.com



# புறஹந்தகளுவர

## (பௌர்ணமி இருள்)

**யுத்தத்தின் விளைவுகள வயிற்றுப் பிழைப்பாகக் கொண்ட கிராமிய சமூகத்தின் அவலம்......**

"புறஹந்த களுவர" திரைப்படம் கடந்த ஜுலை 28ம் திகதி முதல் திரை அரங்குகளிலும் திரையிடப்பட இருந்தது. எனினும் வட பிரதேச புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி அமைச்சர் திரு சரத் அமுனுகம அது திரையிடப்படுவதை ஒத்தி வைக்கும்படி கட்டளை இட்டார். நாட்டின் பாதுகாப்பு நிலமை சீரடைந்தவுடன் உடனடியாகவே திரைப்படம் திரையிடப்படும் என அவர் மேலும் குறிப்பிட்டார். எனினும் இது பற்றிக் கருத்து வெளியிடும் அத்திரைப்படத்தின் இயக்குனர் திரு. பிரஸன்ன விதானகே முடிவில்லாத யுத்தத்தின் மத்தியில் இரண்டு தசாப்தங்களைக் கழித்துள்ள எனக்கு அவர் குறிப்பிடும் நாள் என்றுதான் நாட்டின் பாதுகாப்பு நிலவரம் சீரடையும் என்பது பற்றி கடும் சந்தேகம் நிலவுகின்றது என்கின்றார். இந் நிலைமையில் அவரது கூற்றிலிருந்து விளங்கும் ஒரே அம்சம் என்னவெனில் யுத்தம் நடைபெறும் வரையில் எனது திரைப்படத்தை இந்நாட்டில் ஒரு நாளும் திரையிட முடியாது என்பதாகும்.

பிரஸன்னாவின் இக்கருத்து எவ்வாறாயினும் இத்தடைக்குப் பின்னணியில் யுத்தம் பற்றிய காரணியை விட அரசாங்கத்திற்கு குறுகிய தேவைதான் முக்கியமாக அமைந்துள்ளது என உறுதிப்படுத்தவும் பலர் முயற்சிப்பதாகத் தெரிகிறது. பொதுத் தேர்தலுக்கு "ராஜ்யசேவய பினிஸப்" (அரச சேவைக்கு மாத்திரம்) என்ற திரைப்படத்தை திரையிட்டு குறுகிய அரசியல் இலாபம் தேடுவதே பொதுசன ஐக்கிய முன்னணிப் பிரமுகர்களின் தேவையாக இருந்தது என அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

"யுத்தம் மனிதத் தன்மையை விழுங்கி ஏப்பமிடுவதையே" புரஹந்த களுவர மிகச் சுருக்கமாகச் சுட்டிக் காட்டுகின்றது. சமூகத்தின் எல்லா ஒழுக்க நெறிகளும் அழித்தொழிக்கப்படுவதையும் மிகக் கூர்மையாக அறிமுகத்தின் மேலிருந்து கீழ்வரை தனது சக மனிதனின் தனது தோல், எலும்பு எதையும் விட்டு வைக்காது அனைத்தையும் விழுங்கி ஏப்பம் விடுவதையும் மனதை வாட்டும் விதத்தில் எடுத்துரைக்கப்படுகின்றது. அரசாங்கம் இத்திரைப் படத்திற்கு எதிராக தடை விதிப்பதற்கு இதுவே முக்கிய காரணமாகும். இடைப்பட்ட காரணங்களுக்கு முதலிடம் அளிப்பவர்கள் இவ்வுண்மையை மறைக்கின்றனர்.

### வன்னி ஹாமியின் குறியீடாக.....

பௌர்ணமி நிலவு வானத்தில் காய்கின்றது. அது அஸ்த்தமிக்கும் பொழுது தூர்ந்து போன. மேடையில் வரண்ட குளமொன்றின் வெடித்துப் பிளந்த பூமியின் மீது கால் மிதித்துச் செல்லும் வயலே, கண் குருடான வன்னிஹாமியின் நலிந்து மெலிந்த பாதங்களின் தரிசனத்துடன் அன்றைய திசை ஆரம்பமாகின்றது. குளத்தின் மத்தியில் மிதமாகவுள்ள நீரால் தனது நீர்க் குவலையை நீராக்கிக் கொள்ளவே அவன் மெது மெதுவாக ஸ்திரமின்றி தனது பாதங்களைப் பதிக்கின்றான். வாணிப மணமாக்கலுக்குள் சிக்கி அழிந்துபோன கிராமிய பொருளாதாரமும் அதனுள் அனாதையாகி தனித்து நிற்கும் கிராமத்து மக்களும் இதன் மூலம் குறியீடாக்கப்பட்டுள்ள்னர்.

சுற்றாடலுடன் மேற்கொண்ட சக வாழ்வின் ஊடாகவே கிராமத்தவள் தனது அன்றாடத் தேவைகளை நிறைவேற்றிக் கொண்டாள். அதனால் பண்டைய கிராமங்கள் பாதுகாப்புப் பெற்றன. மழை பிழைத்துப் பெய்த போதும் வனாந்தரம் அவனுக்கு சதா உதவியது. குளத்தில் அங்கும் இங்கும் உலாவிய மீன்கள் வனத்தின் கிழங்குக் கொடிகள், கீரை, பழவகைகள் அவர்களது நித்திய செல்வங்களாக விளங்கின. எனினும் மேற்குறித்த அபிவிருத்தியானது அவை யாவற்றையும் அழித்தொழித்து கிராமத்து மக்களை நட்டாற்றில் வீழ்த்தியது. அபிவிருத்தி என்ற பெயர் அவர்களிடமிருந்த எல்லா வகையான இயற்கை முத்துக்களும் இல்லாதொழிக்கப்பட்டதுடன் இவ் அபிவிருத்தியின் எந்தவொரு பகுதிக்கும் அவர்களாக நுழைய வாய்ப்புக் கிட்டவில்லை.

இந்தத் துஷ்ட அபிவிருத்தியின் மோசமான அறுவடையாத இனமோதலில் மூச்சுப் பிடித்துக் கொள்ள மட்டுமே அவர்களுக்கு வரம் கிடைத்தது. யுத்தத்தை வயிற்றுப் பிழைப்பாகக் கொள்ள மாத்திரமே அவர்களால் முடிந்திருந்தது.

வறட்சியினால் நீரைத்தேடி குளத்தின்



யுத்தம் மனிதத் தன்மையை விழுங்கி ஏப்பமிடுவதையே" புரஹந்த களுவர மிகச் சுருக்கமாகச் சுட்டிக் காட்டுகின்றது. சமூகத்தின் எல்லா ஒழுக்க நெறிகளும் அழித்தொழிக்கப்படுவதையும் மிகக் கூர்மையாக அறிமுகத்தின் மேலிருந்து கீழ்வரை தனது சக மனிதனின் தனது தோல், எலும்பு எதையும் விட்டு வைக்காது அனைத்தையும் விழுங்கி ஏப்பம் விடுவதையும் மனதை வாட்டும் விதத்தில் எடுத்துரைக்கப்படுகின்றது. அரசாங்கம் இத்திரைப் படத்திற்கு எதிராக தடை விதிப்பதற்கு இதுவே முக்கிய காரணமாகும்.

மற்றொரு இடத்தில் நீர் சேகரிக்கும் ஒருவனது கேள்விக்குப் பதிலளிக்கும் வன்னிஹாமி இன்னும் ஒரு சில தினங்களில் மழை பொழியும் எனக் கூறுகிறார். அதற்கு முன்பு உனது வீட்டுக் கூரையை மேய வரும்படியும் அவன் கூறுகிறான். குருடாகிப் போன தன் கண்களைச் சுருக்கி வானத்தை நோக்கி அவன் கூறும் இவ்வார்த்தைகள் அன்று கிராமிய மக்கள் சுற்றாடலுடன் நெருங்கி உறவாடி வாழ்ந்த நம்பிக்கை மிகுந்த வாஞ்சையின் சாயலாகும்.

### பண்டார வீடு செல்கிறான்.

ஓட்டைவடிகாலான பிரதேச வண்டியொன்று கிராமத்திற்குள் நுழைகிறது. தன்னை விட ஒடிசலான துவிச்சக்கர வண்டியொன்றில் பௌத்த பிக்கு ஒருவரை ஏற்றிச் செல்லும் கிராமத்தவன் ஒருவனிடம் பிரதேச வண்டியின் பிரயாணிகள் ஏதோ கேட்கின்றனர். துவிச்சக்கர வண்டியை மீளத்திருப்பிக் கொள்ளும் கிராமத்தவன் பிரதேச வண்டிக்கு முன்னால் துவிச்சக்கர வண்டியை ஓட்டிக் கொண்டு வழி காட்டுகிறான். இப்பிரயாணம் குடிசையின் எல்லையில் முடிவடைந்தது.

ஓடிவரும் கிராம வாசிகள் வண்டியில் வந்த படைவீரர் இருவருடன் சேர்ந்து பிரேதப் பெட்டியைச் சுமந்து செல்கின்றனர். வெள்ளை நிற காகிதத்தால் தயாரிக்கப்பட்ட சிறிய மலர்ச் செண்டை பொறுப்பேற்கும் பையனொருவன் பிரேதப் பெட்டியைச் சுமந்து வருபவர்கள் முன்னால் வருகின்றான். பெட்டி வீட்டில் வைக்கப்படுகின்றது. அதனைத் திறப்பது தடை. பிரேதப் பொட்டியினுள் வன்னிஹாமி மாமாவின் ஒரே மகனான படைவீரன் பண்டாரவின் சடலம் இருப்பதாக அனைவரும் ஏற்றுக் கொண்டு நிற்கின்றனர். வந்துள்ள படை வீரர்கள் அவ்வாறு தான் கூறியுள்ளனர். போர்வீரர்கள் பொய் சொல்வதில்லை.

பண்டாரவின் தங்கை அழுது புலம்புகிறாள். நாய்கள் குலைக்கின்றன. சித்திரக்காரன் ஒருவன் புகைப்படம் பிரேம் ஒன்றைப் பார்த்த வண்ணம் பண்டாரவின் உருவப் படமொன்றை வரைகிறான். வெள்ளைக் கொடிகளை முடிச்சுப் போடுகின்றனர். தமக்கையும் தனது கணவனுடன் வந்து அழுது புலம்புகிறாள்.

"அவங்களோடேயும் கன பேர் இறந்திருக்கினம். ரீ.வீ.யில் கூறினார்கள். எங்களைவிட அவங்கட தொகை அதிகம்" என்று விழித்தோர் வாய் உளறினார்கள். "கவலைப்படத் தேவையில்லை. நம்மளைவிட அவங்கள் அதிகம் செத்திருக்கிறாங்கள்".

"சவத்தைப் பார்க்க ஊரார்கள் விரும்புகிறார்கள்" என்ன செய்ய? சட்டப்படி அது தடை செய்யப்பட்டுள்ளது. போர் வீரர்களின் முகத்தைப் பார்ப்பது அதிகமாக கடவுளின் முகத்தைக் கண்டது போல் திருஷ்டிக்கப்பட இடமுண்டு. அது மரணத்தையும் உண்டு பண்ணலாம். மழை துவங்குகிறது. மக்கிப் போன வைக்கோல் கூரையிலிருந்து சொட்டு சொட்டாக வடியும் மழைநீர் பண்டாரவின் சவப்பெட்டி மீது விழுகிறது. பெட்டி இடம் பெயர்க்கப்படுகிறது.

### கடன் அடைக்க ஒரு இலட்சம்

கிராமத்தின் கிராம சேவகர் படிவமொன்றையும் எடுத்துக் கொண்டு வன்னிஹாமி மாமாவைச் சந்திக்க சைக்கிளில் வருகிறார். அதனை நிரப்பி விரல் அடையாளத்தை இட்டுத் தரும்படி வன்னிஹாமி மாமாவிடம் கேட்கிறார். அப்பொழுது பண்டாரவின் மரணத்திற்காக ஒரு இலட்சம் ரூபா கிடைக்கிறது. அதனால் என்னிடம் ஈடு வைத்துள்ள வீட்டையும் மீட்டெடுத்து மூன்றாம் மாத தானத்தையும் கொடுக்கலாம் அவர் கூறுகிறார்.

பண்டாரே இருப்பதைவிட இறந்தது மேல் என்றே அவர் கூறுகிறார். ஒரு இலட்சம் ரூபா கிடைப்பது அவன் இறந்ததினால் அல்லவா? அதனைக் கொண்டு வீடு வாசல் அடவையும் மீட்டுக் கொள்ளலாம். பண்டாரவின் தங்கையைத் திருமணம் செய்ய வருபவன் அந்த ஒரு இலட்சம் ரூபாவை எடுத்து எல்லோரும் வாழ வழியுள்ள தொழில் ஒன்றை ஆரம்பிக்க யோசனை தெரிவித்தான். பண்டாரவின் மரணம் அவனுக்கு மாறுவேடத்தில் வந்த வரப்பிரசாதமாகும். தங்கையும் தமக்கையும் மூன்று மாத தானத்திற்கான செலவைக் கணக்கிடுகின்றனர். அர்ச்சனைப் பண்டங்கள், பிறபண்டங்கள், மீன், இறைச்சி, செலவு என பத்துப் பதினையாயிரம் செலவாகும். அச்செலவைத் தேடுவது எப்படி? படிவத்தை நிரப்பி ஒரு இலட்சம் ரூபாவை பெற்றுக் கொள்வதாலேயே பிரச்சினை தீரும் என்பது அவர்களது கருத்து.

வன்னிஹாமி மாமா தனது மகனின் பிரேதத்தால் பெறக்கூடிய இலாபங்களை எண்ணவில்லை. பண்டைய கிராமிய சங்கத்தின் ஒழுக்க நெறிகளின் பாதிப்புக்களிலிருந்து அவர் இன்னமும் விடுபடவில்லை. "நான் குருடன் என்பது உண்மைதான்... ஆனால் கண் தெரியும் நீங்களாவது பண்டாரவின் சவத்தைப் பார்த்தீர்களா....? அவன் படையில் சேர்ந்தது

இறந்து போய் நஷ்டஈடு பெறவல்ல... தங்
சியை கரை சேர்க்க... வீடுவாசலைக் கட்
கொள்ள... வன்னிஹாமி தனது மக
எதிர்பார்ப்புக்களைத் தெரிவிக்கிறார்.

எனது கிராம இளைஞனுக்கு இன்று
ஒரே தொழில் படையில் சேருவது மட்டு
படையில் சேர்ந்து செல்லும் அவர்க
எதிர்பார்ப்புக்கள் ஆசிரியர், எழுதுவி
ஞர், வைத்தியர் போன்ற தொழில்களு
செல்பவர்களின் எதிர்பார்ப்புக்களுக்
சமமானவை. அவற்றிற்குப் போர் வீ
என்ற அட்டையை ஒட்டுபவர்கள் அரசி
வாதிகளும், வியாபாரிகளும், மத குரும
களுமே. அந்த ஏமாற்று வார்த்தைய
வன்னிஹாமி மாமாவிற்கு எவ்வித பிரயே
னமும் இல்லை. தனது மகனின் எதிர்பா
புக்களை அவன் நன்கறிவான். இதற்கி
யில் பிரதேசத்தின் அரசியல்வாதிக
வர்த்தகப் பிரமுகர்கள், பிரதான மத
ஆகியோர் வன்னிஹாமி மாமாவின் வீ
ற்கு வருகின்றனர்..... "பண்டாரவின் மும்ம
தானமும் நெருங்கி வருகிறது அல்லவா
ஊருக்குத் திரும்பும் சந்தியில் பண்டார
ஞாபகர்த்தமாக பஸ்தரிக்குமிடமொ
றைக் கட்டப் போகிறோம். அவன் நாட்
காக தனது உயிரைக் கொடுத்ததற்கா
அவர்கள் கூறுகின்றார்கள். வன்னி ஹ
மாமா முகத்தைத் திருப்பிச் சொல்
றார்...... "குருவானவரே! யார் பெயரிலா
அதனைச் செய்வது நல்லதுதான்" அ
கூறுகிறான்.

தனது மகனின் பெயரால் அரசி
இலாபமீட்ட இம்மனிதர்கள் எடுக்கும் முய
அவனுக்கு அருவருப்பை ஊட்டியது. பெ
ணமி மீண்டும் எழுகிறது.... மண்வெட்டியொ
றைத் தோளில் சுமந்த வண்ணம் வன்னிஹ
மாமா தனது மகனின் பெட்டி புதைக்கப்ப
இடத்தைத் தேடிப் புறப்படுகின்றான்... அ
குழியைத் தோண்ட ஆரம்பித்தான்.... மக்
கூடுகின்றனர் மாமாவிற்குத் தேவை
லத்தைப் பார்க்கத்தானே.... எனக் கூ
அவர்கள் பெட்டியை வெளியே எடுத்
இறக்குகின்றார்கள். அதனுள் இரு வாழை
தண்டுகளும், கருங்கல்லும் இருக்கின்ற
சடலத்தின் பாரத்திற்கு சமனாகவே
வைக்கப்பட்டுள்ளது. அப்பாரத்தைச் சம
லைப்படுத்த வைக்கப்பட்டவையே வாழை
தண்டுகள் இரண்டும்.

இவற்றைத் தவிர அங்கு பண்டாரவி
சடலம் இல்லை. பண்டாரவை யுத்தம் வி
ங்கி ஏப்பம் விட்டு விட்டது. யுத்தம் ம
தனை முழுதாக விழுங்கிவிடும் அது சட
ங்களையும் விட்டு வைப்பதில்லை. இற
காதவர்கள் கூட செய்ய வேண்டியது என்
வென்றால் அது பற்றி விசாரித்து அவ
த்தைப்படுவதல்ல. தான் எடுத்த நர
லிக்காக யுத்தம் தந்த நஷ்டஈட்டு
தொகையால் வயிற்றை நிரப்பிக் கொண்
குந்தி இருப்பதாகும்.

அவ்விடத்திற்கு ஓடோடி வரும் கிரா
சேவகர் தலையில் கைவைத்துக் கொ
கின்றார்...... "நீங்கள் என்ன காரியத்
செய்து கொண்டீர்கள்...." அவர் கே
கிறார்..... "இப்பொழுது நஷ்டஈடு எடுப்ப
எப்படி?....." சடலமொன்றும் இல்லை எ
பதை வன்னிஹாமி தெரிவித்துள்ளார். இ
பண்டாரவிற்காக அவருக்கு நஷ்டஈ
கிடைக்காது. பண்டாராவும் இல்லை. நஷ்
ஈடும் இல்லை. கிராம சேவகரின் கட
காசும் கிடைக்காது. உண்மையைத் தேடி
கண்டுபிடிப்பது என்பது பல இலட்ச
போன்றவையை இழப்பதற்குச் சமனான

இவ்வாறு பிரஸன்ன விதானவின் பை
ப்பு கொடிய யுத்தமானது வறிய கிராம
வாழ்க்கையின் ஒரேயொரு இருப்பாக மா
யுள்ளதை வெளிச்சமிட்டுக் காட்டுகின்ற

பணக்காரர் கோடி கோடியாக கமிஷ
எடுத்து மூலதனத்தைக் கூட்டிச் செல்கி
றனர். ஏழை உயிரைப் பணயம் வைத்
சம்பளத்திற்காக யுத்தத்திற்குச் செல்
றான். அவன் இறந்தபின் நஷ்டஈட்டு
களைக் குடும்பத்தின் பொருளாதார நெ
க்கடிகளுக்குத் தீர்வு தரும் மூலதனமாக
கொள்ளப்படுகிறது. அதற்காக கிராமத்
இளைஞனின் அனைத்தும் இழக்கப்ப
கின்றது. அவனுக்கு என்ன நேர்ந்தது எ
எவருக்கும் தெரியாது. சடலமொன்று இ
லை. அஸ்தியும் இல்லை.

அழிவின் அழிவிற்குச் செல்லும் எமது கிரா
மக்களின் தலைவிதி இதுதான். அதனை
காட்ட பிரஸன்னவிற்கு இடமளிக்க முடியுமா?

**ரணத் குமாரசிங்கா**

தமிழில் அ. தைரியராசா

படிப்பகம்

www.padippakam.com



## ...ாநிதி விக்ரமபாகு ......

(7ம் பக்கத் தொடர்ச்சி)

...வடித்தளங்கள் இன்று ...க்கப்பட்டு விட்டன. இப்போரின் ...ணமாக. படிப்படியாக நாம் ...வை நோக்கிச் செல்கிறோம்.

...ந்தவருடம் யுத்தத்திற்கான ...வின் மதிப்பீடு 63 ...யன்களாகும். நான் கூறுகிறேன் ...வரவு செலவுத் திட்டத்தில் ...ம் துண்டு. யுத்தத்தின் ...பலனாகும். இந்த நாடு ...கிறது. பொருளாதாரத்தை ...னெடுத்துச் செல்ல முடியாது. ...ம் மோசமான வழியில் சமூகம். ...று கொண்டிருக்கிறது. ...லைகாரர்கள் சுதந்திரமாக ...கின்றனர். சட்டம் ஒழுங்கும் ...ப்படுத்த முடியாமல் உள்ளது. ...நகம் கூட செயலிழந்துள்ளது.

...வாறு அடக்குமுறையை ...ந்துக் கொண்டு செல்வதால். ...ிருந்து விடபடமுடியும் என ...ள் நினைத்தால், அது ஒரு ...தும். நடைபெறப் ...பதில்லை. நீங்கள் மேலும் ...ம் அமிழ்ந்து விடுவீர்கள். ...கயோ நான் வாசித்தேன். ...மச்சர் கதிர்காமர் கூட இந்தத் ...ானங்கள் ஒரு போதும் ...ளவர்களை மகிழ்விக்கவோ. ...லது தமிழர்களைக் கவலை ...ள்ளவோ செய்யாதென ...கிறார். இந்த மட்டத்திற்கு ...பாழுது அவர் வந்துள்ளார். இது? இந்த தீர்மானங்களை ...னெடுத்துச் சென்றால். ...ுப்பின் தீப்பிழம்புகளே எழும். ...பாழுது பலாத்காரத்தின் மூலம் ...க முயற்சி எடுக்கப்படுகிற ...ளோ ஏற்கனவே பிரிக்கப்பட்டு ...டனர். பிரித்தானியாவின் விடுதலைப்புலிகளுக்கெதிரான சட்டம் எக்கேடும் கெட்டு போகட்டும் இந்தத் தீர்மானத்தை ஒவ்வொரு சபைக்கும் கொண்டு சென்றால் இந்நாடு முழுவதும் இனவெறியால் கொழுந்து விட்டெறியும்.

இவ்வருந்தத்தக்க தீர்மானத்தை கௌரவ அமைச்சர் பெத்மகே முன்வைத்தது கண்டு வேதனைப்—படுகிறேன். இதை ம. வி. மு. கொண்டு வந்திருக்குமானால் ஆச்சரியப்பட்டிருக்க மாட்டேன். ஏனெனில் அவர்களே. இத்தகைய இனவாத இயக்கங்களின் பின்னே செல்பவர்கள் 1988ம் ஆண்டு நான் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த—போது நான் சுடப்பட்டேன். ஒரு துப்பாக்கிச் சன்னம் என்னுடைய வயிற்றை ஊடுருவிச் சென்றது. ஒன்றரை மாதங்கள் நான் வைத்—தியசாலையிலிருந்தேன். எனது வீடு சுற்றி வளைக்கப்பட்டது. இரவு முழுவதும் சுட்டுக் கொண்—டிருந்தனர். என்னுடைய வீட்டைத் தரையோடு தரையாக சாம்பலாக்கி விடவே முயற்சித்தனர். அவர்கள் இனவெறிக்காக நின்றனர். நாம் எதற்காகப் போராடினோம். ஒரு சமாதானத் தீர்வுக்காக வடக்கின் தமிழ் மக்களின் சார்பில் குரலெழுப்பினோம். சந்திரிகா விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். ஒரு நியாயமான அடிப்படைக்கு இட—முள்ளது விடுதலைப் புலிகளும் இதைக் கூறுகிறார்கள் என அவர் கூறினார். இத்தகைய நியாயமான காரணங்களின் காரணமாகவே அந்த அளவு கொடூரம் மக்களிடையே காணப்பட்டது. தோழர்கள் சந்திரிக்காவும். விஜேயும் நாம் இவ் வெறுப்புணர்வை நீக்கி வைக்க செயல்பட வேண்டும் எனக் கூறினர். 1983ம் ஆண்டு கலவரம்.. முன்னர் நடத்திய நாசகார நடவடிக்கைகள். ஜே. ஆர். இன் ஊர்வலங்கள் இந்த வெறுப்புணர்ச்சிக்கான காரணங்கள் எனக் கூறினர். இத்தகைய இனவெறி நடவடிக்கைகளுக்கெதிராக நாம் ஐக்கியத்துடன் போராட வேண்டு—மெனக் கேட்டுக் கொண்டனர். இவ்வாறு தான் நாம் ஐக்கிய சோசலிச முன்னணியை அமைத்—தோம். நாங்கள் ஒருவர் பின் ஒருவராக விழுந்தது போதும். தமிழ் மக்களின் இந்த உரிமை—களுக்காக சமத்துவத்திற்காக சுயவாட்சிக்காக நாம் குரலெழுப்—பினோம்.

**1994 ம் ஆண்டு இந்த அரசாங்கம் பதவிக்கு வந்த பொழுது தமிழ் மக்கள் ஊர்வலம் நடத்தினர். "நீதிக்கு நேரம் வந்துள்ளது" "ஏதோ தீர்வு முன் வைக்கப்படும்" எனக் கோஷித்தனர். ஒருவருடத்தின் பின், 1995ம் ஆண்டு "சுயவாட்சிக்கான தீர்வுகள் இதோ இருக்கின்றன என சந்திரிக்கா கூறினார். எவ்வாறா—னாலும் அத்தீர்வுகள் மீது தமிழர்களோடு பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்க இந்தத் தலைமை தவறி விட்டது. அதன் பொருட்டு அவர்கள் என்ன செய்தனர். யூ என். பியுடனும் இன வெறி அமைப்புக்—களுடனும் பேசியே காலத்தை வீணடித்து ஒரு அரசியல் யாப்புப் பிரேரணையை முன் வைத்தனர். இந்தச் சபையிலே முன்னைய முதலமைச்சர், இந்தப் பிரேரணைகள், 13வது திருத்தத்தை விட ஓரங்குலம் தானும் கூடுதலாகத் தரவில்லை எனக் கூறினார்.**

ஒரு இடதுசாரி இயக்கம் என்ற அடிப்படையில் இந்த ஒரே ஒரு அமைப்புக்குத்தான் புலிகளுடன் நேருக்கு நேராக சரி பிழை பற்றி எடுத்துக் கூற முடியும். உங்களுக்கு அந்த உரிமை இல்லை. ஐக்கிய சோசலிச முன்னணியின் தலைவர்—களும்.. இந்த முதலமைச்சரும் கூடி ஒரு வருந்தத்தக்க நிலையில் இன்று உள்ளனர். இன்று உங்களின் நடவடிக்கைகளின் காரணமாக தமிழ் மக்கள் எல்லா இடங்களிலுமே எம்மை விட்டுச் செல்கின்றனர். மலையகத்திலே தமிழர் எழுச்சித் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. 400 ரூபா கோரிக்கை ஒரு பொருளாதார நடவடிக்கை மட்டுமல்ல. அவ்—வெழுச்சி உங்களுடைய புலிகளுக்—கெதிரான மசோதாவுக்கும் எதிரான—தாகும். இங்கிலாந்திலே நீங்கள் முன்னெடுக்கும் புலிகள் சட்டத்தின் விளைவாக மலையக மக்களுக்கு அனைத்துத் தமிழர் ஆதரவும் பெருகியுள்ளது. கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் அமைச்சர் இந்திக குணவர்த்தன இப்போராட்டத்திற்கு ஆதரவு வழங்கச் சென்றுள்ளார். முன்னர் அவர் சந்திரிகாவின் வலது கை. திடீரென அவர் இடது பக்கம் மாறி விட்டார். அவரது தீவிரவாதப் பேச்சைக் கேட்டு நானும் மகிழ்ச்சி—யடைந்தேன். உண்மையிலேயே இந்த அமைச்சர் மலையக மக்களுக்கு உதவச் சென்றிருக்கிறாரா. அது மறைமுகமாக இந்த அடக்கு முறையை எதிர்க்கிறார் என்பதாகும். அது யுத்தத்திற்கெதிரான நிலைப்பாடாகும். அது இங்கிலாந்தில் புலிகள் சட்டம் நிறைவேற்றப்—பட்டதற்கெதிரானதாகும். ஏன். அந்த மேடையில் உள்ள அனைவரும் இந்தச் சட்டத்திற்கு எதிரானவர்—களாகும். ஆகையினால் மலையக மக்கள் 400 ரூபாவுக்காக மட்டுமல்ல புலிகள் தடைச் சட்டத்திற்கும் எதிரானவர்கள் என்பதே அதன் கருத்து. தமிழ் மக்கள் இத்தகைய எழுச்சிகளிலிருந்து விடுபட்டு நிற்க வேண்டுமென விரும்பினால் இத்த—கைய தீர்மானங்களைக் கொண்டு வரக்கூடாது. இந்தத் தீர்மானத்தைக் குப்பைத் தொட்டியிலே தூக்கி எறிந்து சமாதானத்தை முன்னெடுக்க வாருங்கள். சமாதானத்திற்குக் கரங்களை நீட்டத் தயாராகுங்கள். அல்லாவிட்டால் அதற்கு வேறு வழியே இல்லை. நான் இந்த அளவில் நிறுத்திக் கொண்டு வாக்கெடுப்பிற்கு விடக்கோருகிறேன்.

இத்தீர்மானத்துக்கு ஆதரவாக 68 வாக்குகள் கிடைத்தது. PA, UNP, JVP, MEP, SLMC ஆதரித்தன. NLF எதிர்த்தது. ஒருவரும் நடு—நிலைமை இல்லை.

## பெண்களே ........

(6ம் பக்கத் தொடர்ச்சி)

...ர்சினை மிக முக்கியமாக ...ண்களைப் பாதிக்கும் ஓர் ...ர்சினையாகும். இலங்கை, ...தியா போன்ற நாடுகளில் ...ந்த பல ஏழைப் பெண்கள் ...து வாழ்க்கையைத் தொலை-...ு நிற்கின்றனர். ஏன் எனில் ...ர்கள் நல்லபடி ஒரு குடும்ப ...ழ்வை அமைத்துக் கொள்ள ...மகனுக்கு சீதனம் வழங்க ...ண்டிய நிலையில் உள்ளனர். ... பெண் படித்துப் பட்டம் ...ற்றால் என்ன எவ்வளவு உயர் ...வி வகித்தால் என்ன பெண்-...ம் சீதனம் வாங்கியே திரு-...ம் செய்வதனையே இன்றைய ...ண்மகன் பெருமையாக எண்-...கின்றான். எமது சமூகத்-...ிருந்து சீதனப் பேயை விரட்ட ...ண்டியது பெண்களாகிய எமது ...மை. நாங்கள் சீதனம் என்னும் ...ளையை சமூகத்தில் இருந்து ...ளந்தெடுப்பதன் மூலம் ...பிரச்சினையைத் தீர்க்கலாம்.

...த்து திருமணமான பெண்கள் ...ர் குடும்ப வாழ்வில் கணவனால் ...டுமைப்படுத்தப்படுகின்றனர். ... ஒரு ஆண் ஆதிக்கத்தின் ...ளிப்பாடு ஆகும். எந்த ஒரு ...ண்மகனும் பெண்களுடைய ...ணர்வுகளுக்கும், சிந்தனை ...வமான கருத்துக்களுக்கும் ...ிப்பளிப்பார்களேயானால் ...ம்பங்களில் பெண்ணும் சம ...தஸ்த்தைப் பெற்று சமனாக ...ழ முடியும். ஆனால் ஆண்கள் ...ண்களை அடக்கி ...ழ்வதையே பெருமையாகக் ...ாள்ளுகின்றனர். அதாவது ...ண்மையின் வெற்றியென ...துகின்றனர். பல ஆண்கள் ...ண் சுதந்திரம், பெண் விடுதலை ... பீற்றுவார்கள். ஆனால் ...டமுறை வாழ்க்கையில் தனது ...ம்பத்தில் உள்ள சிந்தனை பூர்வமான ஏதாவது கருத்து கூறினாலே அதனை "பெண்மூப்பு" எனக் கூறுவர். பல பெண்கள் பல விதத்திலும் கணவனால் கொடுமைப்படுத்தப்பட்டாலும் அதாவது உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் தனது கணவனைப் பற்றி வெளியே சொல்லுவது இல்லை. அவரது கொடுமைகளில் இருந்து தப்பி வாழ முயலுவதும் இல்லை. ஏன் எனில் கணவனை பிரிந்து ஒரு பெண் வாழ்ந்தால் அவளை எவ்வாறு அழைப்பார்கள்? இதற்குக் காரணம் எங்களுடைய சமூக அமைப்பும், ஆண்களுக்கு கொடுக்கும் முக்கியத்துவமும் ஆகும். ஆனால் பெண்கள் தங்களால் தனித்து நின்று வாழ முடியும் என்று வாழ்ந்து காட்டல் வேண்டும். பல பெண்கள் தமது மன உணர்வுகளை உள்ளடக்கி வாழ்வதினால் உள ரீதியாகப் பல பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றார்கள்.

எனவே பெண்கள் ஆகிய நாம் மேற் கூறப்பட்ட பிரச்சினைகள் போல் எம்மைச் சூழ உள்ள ஒடுக்கு முறைகளை உடைத்து எமது நியாயபூர்வமான உணர்வு-களையும், சிந்தனைகளையும் ஏற்றுக் கௌ்ளும் வரையும் போராடி வெற்றி கொண்டால், எம்மால் கொண்டாடப்படும் மக-ளிர் தினம் பூரணமானது ஆகும். அல்லாவிடில் இம் மகளிர் தினம் என்பது பெண்களைப் பொறுத்த-வரை ஒரு வெறும் கண்துடைப்பு ஆகிவிடும். எனவே பெண்களே விழியுங்கள் எங்கள் நியாயமான உணர்வுகளுக்கும், சிந்தனை-களுக்கும் ஆகப் போராடுங்கள்

சந்துரு

## "காற்றுக்கென்ன வேலி" திரைப்படத்தடைக்குக் காரணம் தமிழர் விவகாரமே!

"காற்றுக்கென்ன வேலி" திரைப்-படத்தின் தயாரிப்பாளர்கள் ஆர-ம்பக்காட்சியை, கடந்த பெப்ரவரி 18ம் நாள் சென்னை மெரினா கடற்-கரையில் காட்ட ஒழுங்குகளை மேற்கொண்டிருந்தனர். படம் தணிக்கைச் சபைக்கு அனுப்-பப்பட்டு 8 மாதங்கள் பூர்த்தியாகி நாட்கள் மேலும் கடந்து விட்டன. திரையிட இரண்டு நாட்களிருக்க தணிக்கைச் சபை அனுமதி பத்-திரத்தை அளிக்க மறுத்து விட-டது. சென்னை நகரப் போலிசார் திரையிடப்படுவதைத் தடுத்தனர்.

"காற்றுக்கென்ன வேலி" இலங்-கையின் இனப்பிரச்சினையைக் கருவாகக் கொண்ட ஒரு திரை-ப்படம். போராளி மணிமேகலை செல்வநாயகம் காயமடைந்து தமிழ் நாட்டுக்கரையைச் சேர, விசாகபட்டினம் மாவட்டத்தில், மகாத்மா காந்தி வைத்தியசாலை வைத்திய அதிகாரி சுபாஸ் சந்-திரபோசால் வைத்தியம் செய்-யப்பட்டு அவளுக்கும் அவருடன் வந்தவர்களுக்கும் புகலிடம் அளிக்கிறார். தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகளின் ஆதர-வாளர்களுக்கு புகலிடமளித்தல் சட்டத்திற்கு எதிரானதாகும். பூரணமாக சுகமடைந்த பின் மீண்-டும் இலங்கைக்கரையை அடைய அவர்களுக்கு உதவி செய்கிறார். அனுமதி மறுத்ததற்கு தணிக்-கைச்சபை காரணம் கூறியி-ருக்கிறது. இத்திரைப்படம் மறை-முகமாக தடை செய்யப்பட்டது. விடுதலைப் புலிகளைப் பற்றியும் அயல்நாட்டு இராணுவத்தைப் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது எனக் கூறியிருந்தது.

மேன் முறையீட்டு மன்றின் சீலா-கேட்டும் அமிதாக் கின்ஹா தணி-க்கைச் சபையின் முடிவை ஆத-ரிக்க, அம்மன்றின் மற்றொரு உறுப்பினரான நீதியரசர் ஜஸ்பால் சிங் தொடர்ந்து விடுதலைப் புலிகள் என்று குறிப்பிடுவதையும், ஒரு பெண்ணை சிங்கள இராணு-வம் கற்பழிக்கும் காட்சியையும் நீக்கித் திருத்தி விட்டால் இப்-படத்தைத் திரையிடலாம் என மற்-றவர் உறுப்பினர்களுக்கு மாறான கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

இதன் இயக்குனரான புகழேந்தி, இது மனிதத்துவம் பற்றிப் பேசு-கிறது என்றும், இலங்கை இராணு-



வத்தைப் பற்றிக் கூறுவதும், போராளித்தன்மையை நியாயப்-படுத்துவதும் மறுக்கப்பட வேண்-டியவை என தணிக்கைச்சபை கூறுகிறது எனக் கூறியுள்ளார்.

தணிக்கைச் சபையின் தேசியத் தலைவர் ஆஷரபரேக் கருத்து மாறுபாடுகளை வெளியே கூற வேண்டாம் எனக் கூறியுள்ளார். ஆனால் அச்சபையின் உறுப்பி-னரான பத்திரிகையாளர் சூடங்-கன் அனுமதிப்பத்திரம் மறுக்கப்-பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவிக்-குமுகமாக உறுப்பினர் பதவியை ராஜினாமாச் செய்துள்ளார்.

மொத்தத்தில் தணிக்கைச் சபை-க்குள் அரசியல் தலையீடு உள்-ளது என்பது தெளிவாகியுள்ளது. இந்தியா தமிழர் விவகாரத்தில் மாறாகச் செயல்படுகின்றனர் என்-பதை பிரதேச தணிக்கையை ஏக-மனதாகவே மறுத்தது என அதன் உறுப்பினரான ராமு கூறுவதிலி-ருந்து மொத்தமாக இலங்கையில் உண்மையில் நடப்பதை உலகுக்-குக் காட்டுவதை இந்திய தலை-வர்கள் விரும்பவில்லை என்பது உண்மை என்பதை இத்தணிக்-கைச் சபையினர் நடவடிக்கைகள் உறுதிப்படுத்துகின்றன.

படிப்பகம்

www.padippakam.com

புதிய சமதர்மம்
Registered as a news pa[per] in Sri Lanka

வாசகர்களே!
உங்களிடமிருந்து கருத்துக்கள், விமர்சனங்கள்,
ஆலோசனைகள், ஆக்கங்கள் என்வற்றை வரவேற்கிறோம்.
தொடர்புகட்கு
ஆசிரியர்
புதிய சமதர்மம்
143/3, கியு வீதி, கொழும்பு-02
தொலைபேசி: 430621, 305329 தொலைமடல் : 334822

## ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை...

அரசியல் தலைமைகள் மக்களின் நலன்களுக்கு எவ்வித குந்தகமும் ஏற்படாவண்ணம், தன்னலம் துறந்து, மிகத் தெளிவான நீண்டகால நோக்குடன் செயற்படுவது தான் ஆரோக்கியமானதாகும். துரதிஸ்ட வசமாக இந்தநாட்டில் அவ்வாறான நிலை அருகியுள்ளது. அரசியல் நாகரிகமே அற்றுப் போயுள்ள நிலையே காணப்படுகிறது. இதனால் நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் வெவ்வேறளவில் பாதிக்கப்பட்டு வருவதை யாரும் மறுக்க முடியாது.

குறிப்பாக தமிழ் மக்கள் மீது எல்லா அரசாங்கங்களும் கடந்த 52 வருட காலமாகமாகப் பல்வேறு அநீதிகளையும் அட்டூழியங்களையும் இழைத்து வந்துள்ளன. அவர்களுடைய உரிமைகள் அப்பட்டமாக சிதைக்கப்பட்டன. கொன்று குவிக்கப்பட்டன. பெற்றோல் ஊற்றி உயிரோடு பொசுக்கப்பட்டனர். இவற்றையெல்லாம் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்காவே ஒழிவு மறைவின்றி 2000 — ஆவணி 3ம் பாராளுமன்றத்தில் கூறிவைத்துள்ளதை யாரும் அறிவர். டீ. எஸ். சேனநாயக்கவினால் ஆரம்பிக்கப்பட்டு இடையீடின்றி பேரினவாத ரீதியில் நடத்தப்பட்ட திட்டமிட்ட குடியேற்றங்களால் தமிழ் மக்களின் வாழ்வாதார நிலங்கள் பறிபோனது வரலாறு.

இத்தகைய தமிழ் மக்கள் விரோத செயற்பாடுகளை அநீதிகளை சுட்டிக்காட்டும் போது ஈழம் மக்கள் ஜனநாயக கட்சியினருக்கு மனக்கசப்பு ஏற்படுவது போல் தெரிகிறது. 1958, 1977, 1983 கலவரங்களை எடுத்துக் கொண்டால் தமிழ் மக்களுக்கெதிரான யுத்தம் 1950 களிலேயே துவங்கி முடிவின்றி 1983 முதல் படுமோசமாக நடந்து வருகின்றதென்பதை யாரும் மறுக்க முடியாது. அந்த நிலையிலேயே தமிழ் ஆயுதக் குழுக்களும் தமிழீழ விடுதலைப்புலிகளும் தோற்றம் பெற்றனவே ஒழிய தொடரும் யுத்தத்துக்கு அவை காரணம் அல்ல என்பது புலனாகும். இதனை யாரும் மறந்து விடக்கூடாது.

இலங்கை ஒரு ஜனநாயக சோசலிசக் குடியரசு என அரசியல் அமைப்பில் பிரகடனப்படுத்தியிருக்கிறது. ஆனால் இங்கு உண்மையான ஜனநாயகமோ சோசலிசமோ இல்லை என்பது தான் உண்மை. குறிப்பாக கடந்த காலத் தேர்தல் முறைகேடுகளைப் பார்த்தால் ஜனநாயகம் கேலிக் கூத்தாக்கப்பட்டுள்ளது கண்கூடு. எனவே தான் கொழும்பில் ஒரு ஜனநாயக இனவாத விரோத அரசாங்கம் கொலுவீற்றிருக்கிறது. அதனை எதிர்த்து ஒரு பாசிசக் கும்பல் போராடுகிறது என்று யாரும் நினைத்தால் அது முற்றிலும் தவறாகும். அப்படி விசுவசிப்பது அரசியல் அல்ல. கடந்த காலத்தில் ஆயுதம் தாங்கிப் போராடிய ஆயுதக் குழுக்கள் எல்லாம் பாசிச சக்திகாளா? கொலைக்கலாச்சாரம் தான் இந்த நாட்டிலிருந்து ஒழிய வேண்டும். அப்போது தான் இந்த நாடு நிமிர்ந்து முன்னேறும். எல்லா மக்களுக்கும் நிம்மதி கிட்டும்.

இந்த நாட்டில் அன்று முதல் சிங்கள பேரினவாத அரசுகள் தான் கோலோச்சி வந்துள்ளன என்பதை நாம் ஏற்கனவே கூறியுள்ளோம். இத்தகைய எந்தவொரு அரசாங்கத்தையும் ஆதரித்து வருபவர்கள் அதற்காக ஆயிரம் காரணங்களைக் கற்பிக்கலாம். இன்று தமிழீழ விடுதலைப்புலிகளை மையமாக வைத்து அவர்கள் சில காரணங்களை முன் வைக்கின்றனர். புலிகள் இயக்கம் இங்கே இல்லை என்று ஒரு கணம் நினைத்தாலும் அவர்கள் வேறுபல காரணங்களைக் கற்பிக்கச் செய்வார்கள். புலிகள் தோற்றம் பெற முன்னரே தமிழ் தலைமைகள் பேரினவாத அரசாங்கங்களை ஆதரிக்கவில்லையா? பின்பு ஏமாற்றப்பட்டோம் என்று சொல்லவில்லையா?

ஜனாதிபதி சந்திரிகாவை சமாதானப் புறாவென தமிழ் மக்கள் முதலில் நம்பினர். நம்பிக்கெட்டனர். அவரை விமர்சிக்கும் போது ஈழம் ஜனநாயக மக்கள் கட்சிக்கு மனக்கசப்பு ஏற்படுவது ஒருவகையில் ஆச்சரியத்துக்கு உரியதல்ல. ஆனால் ஆட்சியாளர் எல்லா ஏழை எளிய மக்களுக்கும், குறிப்பாக தமிழ் மக்களுக்கும் இழைக்கும் துரோகங்கள் தொடர்பாக உண்மையை நாம் கூற வேண்டும். மற்றெல்லாம் சரிந்து செல்லும்போது, உண்மை, தான் பிரதானம். "ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடை முறை தாம் சாம் துயரம் தரும்" என்பது குறள்



# பயங்கரவாத இயக்கமல்ல என்பதை புலிகள் நிரூபித்துள்ளனர்.

## யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம்

"ஸ்ரீலங்கா அரசும் அங்குள்ள பேரினவாதக் கட்சிகளும் விடுதலைப்புலிகள் அமைப்பைப் பிரித்தானிய அரசு தடை செய்ய வேண்டும் எனக் கோருவது ஒரு வகையிலே பேச்சுவார்த்தைக்கு முட்டுக்கட்டையாக இருக்கலாம். இப்படியான ஒரு முடிவைப் பிரித்தானிய அரசு எடுக்குமாயின் இதுக்கு ஒரு பாதகமாகத்தான் முடியும். ஆனால் இருந்தும் இந்தக் கால கட்டத்தில் தொடர்பு சாதனங்கள் மிகவும் நேர்த்தியாக, மிகவும் சுலபமாக வேலை செய்வதால் லண்டனிலிருந்து தான் பேச வேண்டும் என்கின்ற தேவையில்லை. இருந்தாலும் பிரித்தானிய அரசாங்கத்திடம் கத்தோலிக்க திருச்சபையும், பல ஸ்தாபனங்களும், பல நிறுவனங்களும் இதைத் தெரியப்படுத்தியுள்ளோம். அவர்கள் விடுதலைப் புலிகளைத் தடை செய்யக் கூடாதெனக் கேட்டுள்ளோம்.

அவர்கள் மறுப்புச் சொல்லி இந்தப் பணியில் இறங்கினால் அது சமாதானத்திற்கு ஒரு பாதகமான செயலாகத்தான் அமையும். அது தூரத்திலே எடுத்துச் செல்லுகிற ஒரு காரியமாக இருக்கும். ஆகையினால் இவ்விதமாகச் செய்ய வேண்டாம் என்று சொல்லி நாங்களும் அழுத்தங்களைக் கொடுத்து வருகின்றோம்"

இவ்வாறு யாழ். கத்தோலிக்க திருச்சபையின் ஆயர் அதிவண. தோமஸ் சவுந்தரநாயகம் தெரிவித்துள்ளார்.

வன்னிக்கு விஜயம் செய்த எமது செய்தியாளர் ஆயரைச் சந்தித்து, சிறீலங்கா அரசும் இனவாதக் கட்சிகளும் விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடை செய்ய வேண்டுமென பிரித்தானிய அரசைக் கோருகின்றன. இது சமாதானப் பேச்சுவார்த்தைக்கு முட்டுக்கட்டையாக இருக்கிறதா?" எனக் கேட்ட போது அதற்குப் பதிலளிக்கையிலேயே ஆயர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என முடிவு எடுத்து ஒரு நல்லெண்ண முயற்சியாக யுத்த நிறுத்தத்தை மேற்கொண்டுள்ள போதிலும், அரசு அதற்கு செவிசாய்க்காது தமிழர் பிரதேசங்களை ஆக்கிரமிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவது குறித்து உங்கள் கருத்து என்ன? என ஆயரிடம் கேட்டபோது,

விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தை மூலமாக ஒரு சுமூகமான முடிவைக் கொண்டுவர இணங்கிய போது யாழ். மக்கள் மத்தியிலே மிகவும் மகிழ்ச்சியும் சந்தோசமும் இருந்தது. ஏனென்றால் இவ்வாறாக பேசித்தான் ஒரு முடிவைக் காண வேண்டும் என்று விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தத்தை அறிவித்திருந்தும் அரசாங்கம் இணக்கம் காட்டாமல் அவர்கள் தொடர்ந்தும் போரை நடாத்திக் கொண்டு இருப்பது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும்.

அரசாங்கம் இவ்விதமான கடினப்போக்கை கடைப்பிடிக்கக்கூடாது என்று சொல்லித்தான் பல நாடுகள் அழுத்தத்தைக் கொடுத்துக் கொண்டு வருகின்றன. இந்தப் பேச்சுவார்த்தைக்கு உதவி புரிவதற்காக வந்த நோர்வே நாட்டுப் பிரதிநிதிகளும், அரசுக்கு அழுத்தத்தைக் கொடுத்துக் கொண்டு வருகின்றனர். கத்தோலிக்க திருச்சபையைப் பொறுத்த மட்டிலும் நாங்கள் பலவிதமாக அவர்களுக்கும், இதைத்தான் ஞாபகப்படுத்திக் கொண்டு வருகின்றோம். அதாவது இது ஒரு பொன்னான சந்தர்ப்பம். அரிய ஒரு வாய்ப்பு இந்தப் பேச்சுவார்த்தை மூலமாக, இந்த நீடிய யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து, சிறுபான்மையினருக்கு நல்லதொரு முடிவைக் காண்பதற்கு எடுக்கப்படவுள்ள அந்த வாய்ப்பைக் கைநழுவ விடாமல் தொடர்ந்து நல்லிணக்க செயற்பாடுகளில் ஈடுபட்டு சமாதானத்துக்கான பேச்சுவார்த்தையை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்று தான் நாங்களும் அவர்களும் கேட்டுக் கொண்டு இருக்கின்றோம்.

தென்பகுதியைப் பொறுத்த வரையில் ஒரு பகுதியினர் யுத்தத்தின் மூலமாகத்தான் விடுதலைப் புலிகளை வெற்றிகொண்டு இந்தப் போருக்கு முடிவு காண வேண்டும் என்பது அவர்களுடைய சிந்தனையாக இருக்கிறது. ஆகவே இந்தப் பகுதியினர், மிகவும் ஓலமாகச் சத்தம் போட்டு அரசாங்கத்தை தூண்டுவதாகவும் இருக்கின்றது. அரசும் போரின் மூலமான சமாதானம் என்ற கோசத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பதாக இருக்கின்றது. இருந்தும் ஜனாதிபதி, தனது பேச்சில்



போரினால் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது. பேச்சினால் தான் இந்தப் பிரச்சினக்கு நல்ல முடிவைக் காண வேண்டும் என்பதை அடிக்கடி சொல்லிக் கொண்டு இருக்கின்றார்.

மடுமாதா திருச்சுருவம் தென் பகுதிக்கு எடுத்துச் செல்லப்பட இருப்பதாக அறிகின்றோம். அதன் நோக்கம் என்ன?

இந்த நாட்டில் வன்செயலும் போரும் ஓய்ந்து ஒரு சுமூகமான, எல்லோரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வு வருவதற்கு இறைவனுடைய அருள் கிடைப்பதற்காக இந்த விதமான மடுமாதா அன்னையின் திரு உருவத்தைத் தாங்கிய யாத்திரை, சமாதானத்துக்கான யாத்திரையாக எடுத்துச் செல்லப்படவுள்ளது.

வன்னிப்பகுதி மக்கள் படும் அவலங்கள் குறித்து ஆயர் என்ற முறையில் சிறீலங்கா ஜனாதிபதிக்கு எடுத்துக் கூறினீர்களா?

வன்னிப் பகுதியில் மக்கள் படு
சொல்லொணாத் துன்பங்களை
நீக்க வேண்டும். உதாரண
உணவுப் பொருட்களை தாரா
அனுப்பி வைத்தல். எரிபொரு
களைத் தாராளமாக அனு
வைத்தல். கட்டுப்பாடுகளை வி
குவது. உள்ளே வெளியே செல்
இலகுவாக்குவது, யுத்தத்தினு
கொடுமையைத் தணிப்பது இ
டியான வேண்டுகோள்களை
முன்வைத்தோம். மூன்று ஆ
களும் ஒன்று சேர்ந்து அதா
தமிழ் பேசுகின்ற இடங்களில்
மூன்று ஆயர்களும் ஒன்று சே
ஓர் அறிக்கையும் ஜனாதிபதி
கொடுத்துள்ளோம். ஆகவே
அவர்களைக் கேட்பது என்
வென்றால் இப்படியான ஒரு சூ
உருவாக்குங்கள் என்று
விசேடமாக வன்னி வாழ் ம
மீதான நீண்டகால
சுமத்தப்பட்டிருக்கின்ற இ
பொருளாதாரத் தடையை நீக்கு
படியாக கேட்டுள்ளோம்.

இவ்வளவு காலமும் விடுத
புலிகள் தமிழ் மக்களுடைய வி
தலைக்காக நீண்ட போரை நட
பல்வேறு உயிர் இழப்புக்க
பொருள் இழப்புக்களை சந்தி
நம்முடைய தமிழ் பேசும் மக்க
தடவைகள் இடம் பெயர்
சொல்லொணாத் துன்பங்க
அனுபவித்துக் கொண்டிருக்
இவ்வேளையில் தலைவர் பிரபா
அவர்கள் இந்தப் பேச்சுவார்த்தை
இணக்கம் தெரிவித்தது மிக
வரவேற்கக் கூடிய ஒரு கார்
அது மாத்திரமல்ல போர்
நிறுத்தத்தை ஒரு தலைப்பட்ச
அவர் செய்ததும் வெளிநாட்டு ம
விடுதலைப் புலிகள் மேல் ஒரு
அபிப்பிராயத்தை ஏற்படுத்தியுள்
இவ்வளவு காலமும் விடுத
புலிகளைப் பயங்கரவாத அ
என்று சொல்லி அரசினால்
சூட்டப்பட்டு பெரிய பிரச்சார
எல்லாவற்றையும் செய்து உ
மக்கள் மத்தியிலே சித்தரிக்கப்ப
இந்த எண்ணமானது
அண்மைக்காலத்திலே விடுத
புலிகளைப் பற்றிய நல்ல
அபிப்பிராயம் அகில நாடுகளி
ஏற்பட்டுள்ளது. விசேடமாக
ஒரு தலைப்பட்சமான
நிறுத்தமானது பல நாடுகளுை
கவனத்தையும் திருப்பியுள்
ஆகவே இன்றைக்கு விடுத
புலிகளைப் பற்றி நல்ல
அபிப்பிராயம் தான் அகில நா
மத்தியில் நிலவி வருகிறது. எ
தான் இந்த விதமாக விடுத
புலிகள் இன்றும் யுத்த நிறுத்த
முடிக்காமல் அதை கைவி
விடாமல் இவ்விதமான சமா
சமிக்ஞைகளை மேலும் மே
செய்யும் பொழுது நிச்சயமாக எ
நாடுகளும் அவர்களுக்குப் பின்ன
நிற்கும் பொழுது பேச்சுவார்த்தை
முன்னெடுத்துப் போவதற்கு
நல்ல உதவியாக இருக்கும் எ
கருதுகின்றேன்.

ஆகவே விடுதலைப் புலிகளுக்கு
நன்றி சொல்ல வேண்டும். அவ
இவ்வாறான நல்லெண்ண சமி
ஞைகளைச் செய்து இதன் மூ
மாகத் தாங்கள் ஒரு பயங்கர
இயக்கம் அல்ல, உண்மையா
ஒரு விடுதலை இயக்கம் என்
அவர்கள் நிரூபித்து இரு
கின்றார்கள் என்றார்.

படிப்பகம்

இப்பத்திரிகை இல.143, கொழும்பு-2ல் வசிக்கும் லீனஸ் ஜயதிலக என்பவரால் கொழும்பு-2 ஒஸ்வின் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது